பொதுசன நூலகம்
- 7 AUG 2006
மாநகர சபை
யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

புக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 22 திங்கட்கிழமை (07.08.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 231

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# மூதூர் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு நான்கு வாரகால அவகாசம்

## நோர்வேயிடம் புலிகள் முன்வைப்பு

(கிளிநொச்சி)

மூதூர் பிரதேச மக்களினது பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நான்கு வாரகால அவகாசத்தை நோர்வேக்கு விடுதலைப்புலிகள் அளித்துள்ளனர்.

அதற்கு முன்னதாக ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக மாவிலாற்று நீரைத்திறந்து விடவும் விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடம் இணக்கம் தெரிவித்துள்ளது. தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நோர்வேயின் சிறப்புத்தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் நேற்று சந்தித்துப்பேசியபோது இவ் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மாவிலாற்றை திறக்க அரசு அனுமதிக்காது

## இராணுவமே திறக்கும் என்கிறார் பேச்சாளர்

மாவிலாறு அணையின் மதகுகளை அரசாங்கம் திறக்குமெனவும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் இணக்கம் தெரிவித்திருந்ததை அரசாங்கம் நிராகரிப்பதாகவும் அமைச்சரும் அரச பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

புலிகள் அணையைத்திறப்பதை நாங்கள் விரும்பவில்லை. நீர்ப்பாசனத்திட்டப் பொறியியலாளர்கள்தான் அதனைச் செய்ய வேண்டும். இல்லையெனில் எந்த வழியிலாவது நாங்கள் திறப்போம்.

நீர் ஒரு பேச்சுக்குரிய கருவியாக இருக்கக்கூடாது. நீர்விநியோக திட்டம் தொடர்பான எதனையும் நாங்கள் ஏற்கவில்லை என்றார் அவர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வே,ஐஸ்லாந்து பிரதிநிதிகள் க.கா.குழுவில் தொடர்ந்து நீடிப்பர்

(கிளிநொச்சி)

இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவில் நோர்வே, ஐஸ்லாந்து ஆகியவை தொடர்ந்து நீடிக்குமென்று இலங்கைக்கான நோர்வே சிறப்புத்தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்தபின்னர் ஊடகவியலாளர்களிடம் அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

நோர்வே வேண்டுகோளை ஏற்று மாவிலாறு மதகை திறக்க ஒப்புக்கொண்டமைக்கான தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடத்தைப் பாராட்டுகின்றோம்.

தொடரும் வன்முறைகள் முடிவுக்கு வரும் என்பதில் முழுமையான நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. வன்முறை அற்ற சூழ்நிலையை உருவாக்க இது மிகவும் முக்கியமானது.

மக்களின் பிரச்சினைகளுக்கு எப்படித் தீர்வுகாண்பப

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கோப்பாயில் நேற்று இளைஞன் சுட்டுக்கொலை

# மூதூரில் செல் தாக்குதல்

# 15 தமிழர்கள் உயிரிழப்பு

## கோப்பாயில் நேற்று இளைஞன் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்ச் சந்தியில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இளைஞன் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கந்தையா சுதாகரன் (வயது 33) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். இது தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-5)

# 15 தமிழர்கள் உயிரிழப்பு

(திருகோணமலை)

இராணுவம் நேற்றிரவு 7.10 மணியளவில் நடத்திய எறிகணைத்தாக்குதலில் 15 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 20 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

திருகோணமலையின் தென்பகுதியில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப்பகுதிகளான ஈச்சிலம்பற்று மற்றும் மூதூர் கிழக்கு கடலோரக்கிராமங்களான நல்லூர்,உப்பூறல் பகுதிகள்ளச்சேர்ந்த கிராமங்களின் மீது நேற்றிரவு 7.15 மணியளவில் நடத்தப்பட்ட இத் தாக்குதலில் 15 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.20 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்தப் படுகொலை எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்' என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தின் நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த தமிழ் மக்களே இந்த எறிகணைத்தாக்குதலில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை நகரசபைச் சாரதி வீதியில் வைத்து சுட்டுக்கொலை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபையின் சாரதி நேற்று முன்தினமிரவு 7.30 மணியளவில் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டுள்ளார்.


புலோலி தெற்கு பருத்தித்துறை பண்டாரி அம்மன்கோயிலடியைச் சேர்ந்த ஆறுமுகம் உதயசங்கர் (வயது 44) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவத்தையடுத்து மேலும் தெரிய வருவதாவது; நேற்று முன்தினம் புலோலி மேற்கு சாலம்மை வீதியில் சென்று கொண்டிருந்தபோதே இனந்தெரியாதோரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

சடலம் தற்போது மந்திகை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மரண விசாரணை நடைபெற்று வருகின்றது. (எ-101,52)

# மாவிலாற்றைத் திறக்கச்சென்ற பிரதிநிதிகள் மீது செல்தாக்குதல்

## ஆற்றைத் திறக்கும் முயற்சி முடக்கம்



மாவிலாற்றை திறக்கச்சென்ற இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுத்தலைவர் உல்ப் ஹென்றிக்சன் ,திருகோணமலை

மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் எழிலன் குழுவினர் ஆட்லறித் தாக்குதலில் இருந்து உயிர்தப்பியுள்ளனர்.

இதனையடுத்து மாவிலாற்றை திறக்கும் முயற்சி கைவிடப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகான நோர்வே அனுசரணையாளர்களுக்கு நான்கு வார கால அவகாசம் அளிப்பதாகவும் அதற்கு முன்னதாக ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக மாவிலாறு அணைகள் திறக்கப்படுமென்று நேற்றுக்காலை கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்திருந்தனர்.

இதையடுத்து கிளிநொச்சியிலிருந்து திருகோணமலையில் பிற்பகல் 2.30 மணிக்கு மாவிலாற்றைத்திறக்க போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின்தலைவர் உல்ப் ஹென்றிக்சன், கண்காணிப்புக்குழுவின் திருகோணமலை மாவட்டத்தலைவர் ஓவே ஜேன்சன் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை (10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முத்தரப்புத் தொடருக்கான இலங்கை அணி அறிவிப்பு

## மாவன் அத்தப்பத்துக்கும் வாய்ப்பு

மூன்று நாடுகள் கிரிக்கெட் போட்டிக்கான இலங்கை அணி அறிவிக்



கப்பட்டுள்ளது. இதில் முன்னாள் அணித்தலைவர் அத்தப்பத்து இடம் பெற்றுள்ளார்.

இலங்கை, இந்தியா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையிலான முத்தரப்பு கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 14ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகின்றது. இந்நிலையில் இதற்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் இலங்கை அணி யின் முன்னாள் அணித்தலைவர் மாவன் அத்தப்பத்து இடம் பெற்றுள்ளார். முதுகுவலியால் அவதிப்பட்டு வந்த அத்தப்பத்து கடந்த 5 மாதங் களாக போட்டிகள் எதிலும் பங்கேற் காமல் இருந்து வருகிறார். தற்போது தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக நடை பெற்று வரும் டெஸ்ட் தொடரிலும் அவர் விளையாடவில்லை.

35வயதான அத்தப்பத்து கடந்த மே மாதம் அவுஸ்திரேலியா சென்று முதுகுவலிக்காக சத்திரசிகிச்சை செய்து கொண்டார். எனவே அவர் 3 நாடுகள் போட்டியிலும் ஆடமாட் டார் என்று முன்னர் தெரிவிக்கப் பட்டது ஆனால் தற்போது காயம் குணமடைந்து விட்டதால் 15பேர் கொண்ட இலங்கை அணியில் அவர் இடம்பெற்றுள்ளார். அத்தப் பத்து அணிக்கு திரும்பினாலும் அணித்தலைவர் ஜயவர்த்தனா தான் நீடிப்பர் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

3 நாடுகள் போட்டிக்காண இலங்கை அணி வீரர்கள் விவரம் வருமாறு:-

ஜெயவர்த்தனா அணித்தலை வர், சங்ககாரா துணைத்தலைவர், ஜெயசூர்யா , அத்தப்பத்து, டில் ஷான், தரங்கா, கபுகேதரா, மக ரூப், வாஸ், லசித் மலிங்கா, பெர் ணாண்டோ, முரளிதரன், பண்டாரா, ருசிரா, பெரரா மற்றும் பிரசன்னா ஜெயவர்த்தனா.

# முத்தரப்புத் தொடருக்கு மேற்கிந்திய தீவுகள் சம்மதம்

சிங்கப்பூர் மற்றும் மலேசியா வில் நடக்கும் முத்தரப்பு தொடரில் பங்கேற்க மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபை சம்மதம் தெரிவித் துள்ளது. இத்தொடருக்கான 14 பேர் கொண்ட அணியை அந்நாட்டு கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. இந்தியா அவுஸ திரேலியா மற்று மேற்கிந்திய தீவு கள் அணிகள் பங்கேற்கும் முத் தரப்பு கிரிக்கெட் தொடர் எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடக்கவி ருப்ப தாக இந்திய கிரிக்கெட் சபை சில நாட்களுக்கு முன் அறிவித்தது. இத் தொடரில் கலந்து கொள்வதாக இந் திய மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் ஒப்புக் கொண்டன. ஆனால் மேற்கிந்திய தீவுகள் கிரிக் கெற்சபை சம்மதம் தெரிவிக்க வில்லை. கிரிக்கெற் சபை கூட்டத் திற்குப் பின் தனது முடிவை தெரி விப்பதாக கூறிவந்தது. இந்நிலை யில் மேற்கிந்திய தீவுகள் பங்கேற்க வில்லை எனில் அந்த அணிக்கு பதிலாக இலங்கை மற்றும் நியூ சிலாந்து அணிகள் பங்கேற்கும் என இந்திய கிரிக்கெட் சபை அறி வித்தது.

இதற்கிடையே மேற்கிந்தியதீவு கள் கிரிக்கெட் சபைக்கும் வீரர்க ளுக்கும் இடையேயான பிரச்சி னைக்கு நேற்று முன்தினம் தீர்வு கிடைத்தது. இதன்படி சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் நடக்கும் முத்தரப்பு தொடரில் பங்கேற்பதாக அந்நாட்டு கிரிக்கெட் சபை நேற்று அறிவித்தது. இத்தொடருக்கு பிரை யன் லாரா அணித்தலைவராக நிய மிக்கப்பட்டுள்ளார். மேலும் இத் தொடருக்கான வீரர்களின் சம்பளத் தையும் அந்நாட்டு கிரிக் கெட்சபை தெரிவித்துள்ளது. அனுபவம் இல் லாத வீரர்களுக்கு 20 இலட்சம் ரூபாவும் அனுபவம் வாய்ந்த வீரர் களுக்கு 50 இலட்சம் ரூபாவும் வழங் குவதாக முடிவுசெய்துள்ளது. இத் தொடரின் இறுதிப் போட்டிக்கு மேற் கிந்தியத்தீவுகள் அணி தகுதி பெற் றால் அறிவிக்கப்பட்ட தொகையில் 50 சதவீதம் கூடுதலாக பெறுவர் எனவும் அறிவித்துள்ளது. வீரர் களை தேர்வு செய்யும் முழு அதி காரமும் மேற் கிந்தியதீவு கள் கிரிக் கெட் சபைக்கே உள்ளது என அறி வித்ததோடு மேற்கிந்திய தீவுகள் அணியின் வீரர்கள் கூட்டமைப் பின் ஆலோசனைகளை நிராகரித்து விட்டது அந்நாட்டு கிரிக் கெற்சபை.

*அணி விபரம் அறிவிப்பு*

முத்தரப்பு தொடருக்கான 14 பேர் கொண்ட அணியை மேற்கிந் தியதீவுகள் கிரிக்கெற் சபை நேற்று முன்தினம் அறிவித்தது. அணி வரு மாறு பிரையன்லாரா அணித் தலை வர் சர்வான், கிறிஸ் கெய்ல், சந்தர் போல், மோர்டான், பிராவோ டுவைன் ஸ்மித், கார்ல்டன் பாக் (வி.கீப்பர்) கொலிமோர், எட்வர்ட்ஸ், பிராட்ஷா, ஜெரோம் டெய்லர், சாமுவேல்ஸ் மற்றும் வேவல் ஹைறண்ட்ஸ்.

# இ.பிரிவில் சானியா ஜோடி தோல்வி ஓ.பிரிவில் ஷரபோவா வெற்றி

அகுரா கிளாசிக் டென்னிஸ் இரட்டையர் பிரிவின் காலிறுதியில் இந்தியாவின் சானியா மிர்சா ஜோடி தோல்வியடைந்தது. டபிள்யூ. டி.ஏ. அந்தஸ்து பெற்ற அகுரா கிளா சிக் டென்னிஸ் தொடர் அமெரிக் காவின் சான்டியாகோ நகரில் நடக் கிறது. இத் தொடரில் சானியா தென் ஆபி ரிக்காவின் லைசல் கூபருடன் ஜோடி சேர்ந்து விளையாடி வரு கிறார். ஏற்கனவே ஒற்றையர் பிரிவில் தோல்வியடைந்த சானியா இரட் டையர் பிரிவில் பட்டம் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்டது. நேற்று முன் தினம் நடந்த இரட்டை யர் பிரிவு காலிறுதியில் இந்த ஜோடி ஜேர்ம னியின் அன்னா கிரோன் பீல்டு மற்றும் அமெரிக்காவின் மேகன் ஷக்னஸியை எதிர்த்து விளை யாடியது. கடுமையாக போராடிய சானியா ஜோடி 2.6.5-7 என்ற நேர் செட்களில் தோற்று தொடரிலி ருந்து வெளி யேறியது.

ஷரபோவா வெற்றி:- ரஷ்யா



வின் மரியா ஷர போவா 6-2 6-3 என்ற நேர்செட்களில் நட்பு சம்பிய னான பிரான் சின் மேரி பியர்சை எளிதாக வென்றார். பெல் ஜியத் தின் கிம் கிளைஸ்டர்ஸ் 7-5, 6-2 என்ற நேர் செட்களில் சுவிட்சர் லாந்தின் மார்ட்டினா ஹிங் கிசை தோற் கடித்தார். சுவிட்சர்லாந்தின் பேட்டி ஸ்னைடர் 6-4, 6-3 என்ற நேர் செட்களில் ரஷ்யாவின் எலினா டெமன்டிவாவை வீழ்த்தினார். செக் குடியரசின் நிக்கோல் வைடிசோவா 3-6, 6-4, 6-3 என ரஷ்யாவின் அன்னா சக் வெடாட்சியை தோற் கடித்தார். (து)

# தென்னாபிரிக்க வீரர்களின் பணம் திருட்டுப்போனது

(கொழும்பு)


கொழும்பில் ஹோட்டல் அறை யில் தங்கி இருந்த தென் ஆபிரிக்க வீரர்கள் நிற்னி றொடல்ப் ஆகி யோரின் பணம் திருட்டு போயுள் ளது. தென் ஆபிரிக்க கிரிக்கெட் அணி இலங்கையில் சுற் றுப்ப யணம் செய்து விளையாடி வரு கிறது. 2 டெஸ்ட் போட்டித் தொட ரில் முதல் டெஸ்டில் இலங்கை வெற்றி பெற்றது.

2ஆவது டெஸ்ட் கொழும்பில் நடைபெற்று வருகிறது. இந்த டெஸ் டில் விளையாடி வரும் தென் ஆபி ரிக்க வீரர்கள் கொழும்பில் உள்ள தாஜ்சமுவ ஹோட்டலில் தங்கி இருந்தனர். நிற்னி றொடல்ப் ஆகிய வீரர்களின் பணம் திருட்டு போனது. அவர்களது அறையில் இருந்த பணம் காணாமல் போய் இருந் தது. றொடல்ப் நிற்னியுடைய 45 ஆயிரம் ரூபாயும் றொடல்ப் பின் 75 ஆயிரம் ரூபாவும் திருட்டுபோனது.

இதுதொடர்பாக கொழும்பு பொலி ஸார் விசாரணை நடத்தி வருகி றார்கள் முதல் கட்டமாக ஹோட் டல் ஊழியர்களிடம் விசாரணை நடத் தப்பட்டு வருகிறது.

# துடுப்பாட்டத்தில் கிப்ஸ்; பந்து வீச்சில் முரளி கலக்கல் விறுவிறுப்பான ஆட்டமாக இரண்டாவது டெஸ்ட்

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத் தாடி வரும் தென்னாபிரிக்க அணி நேற் றைய மூன்றாம் நாள் ஆட்டத்தில் ஆட்ட நேர முடிபில் ஏழு விக்கெட் இழப்பிற்கு 257 ஓட்டங்களைப் பெற்று இலங்கை அணியை விட இரண்டாவது இனிங்ஸில் மூன்று விக்கெட்டுக்கள் மீதமுள்ள நிலை



யில் 297 ஓட் டங்களினால் முன்னிலை வகிக்கின்றது.

இலங்கை தென்னாபிரிக்க அணிகளுக்கி டையிலான 2 டெஸ்ட் போட் டிகள் கொண்ட தொடரில் இர ண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி கொழும்பு பி.சரவணமுத்து மைதானத் தில் நடைபெற்று வருகிறது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுக் களையும் இழந்து 361 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி டி.வில்லியர்ஸ் 95 ஓட்டங்களையும் அணித்தலைவர் அஸ்வேல் பிறின்ஸ் 87 ஓட்டங்களையும் மற்றும் ஷோன் பொ லக் 57 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் இலங்கை அணி சார் பாக முரளிதரன் ஐந்து விக்கெட்டுக்களை யும் மலிங்க மூன்று விக்கெட்டுக்களை யும் வாஸ், மகரூப் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தி னர்.

தொடர்ந்து தனது முதலாவது இனிங் ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 321 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் முன்னணி வீரர்கள் பிரகாசிக்காத நிலையில் பின்வரிசையாட் டக்காரர்களான சமிந்தவாஸ் 64 ஓட் டங்களையும் ,கப்புக்கெந்தார 63 ஓட் டங்களையும், மகரூப் 56 ஓட்டங்களை யும் மற்றும் ஜெயசூரியா 47, பிரசன்ன ஜெயவர்த்தன 42 ஓட்டங்களையும் பெற் றனர்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஸ்ரீன் 5 விக்கெட்டுக்களையும் நிற்னி 4 விக்கெட்டுக்களையும் பொயே ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

முதலாவது இனிங்ஸில் இலங்கை அணியை விட் 40 ஓட்டங்கள் முன்னிலை யில் இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி நேற்று மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் 7 விக்கெட்டுக்க ளை இழந்து 257 ஓட்டங்களைப் பெற்றி ருந்தது.

இதில் கிப்ஸ் 92 ஓட்டங்களையும், டி. வில்லியர்ஸ் 33 ஓட்டங்களையும் மற்றும் ஹோல் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் முரளிதரன் 4 விக்கெட்டு க்களையும் மக்ரூப் ஒரு விக்கெட்டுக்க ளையும் வீழ்த்தினர்.

இந்த இனிங்ஸில் முரளிதரன் இன் னுமொரு விக்கெட்டைக் கைப்பற்றினால் தொடர்ந்து மூன்று போட்டிகளில் பத்து விக்கெட்டுக்களை வீழ்த்திய சாதனை யைப் பெறுவார்.



# அன்று ஒரு தகவல்

## மின்காந்த குறுக்கீடு

(Electro Maganetic Interference-EMI)

இரண்டு பேர் சுவாரஸ்யமாக பேசிக்கொண்டு இருக்கிற போது குறுக்கே புகுந்து தொந்தரவு பண்ணுவதற்கென்றே சில பேர் இருப்பார்கள். அது ரொம்பவும் இடைஞ்சலாக இருக்கும். இதே மாதிரி மின் காந்தம் கூட குறுக்கே புகுந்து தொந்தரவு செய்யும். கடைசியில் அது பெரிய சிக்கலில் கொண்டுவந்து விடும்.

சில வீடுகளிலே கேபிள் கனெக்ஷன் இல்லாமல் சில தனியார் டி.வி காட்சிகள் தெரியும். அதற்கு இந்த மின்காந்த குறுக்கீடுதான் காரணம். இதைத்தான் சுருக்கமாக EMI என்று சொல்கிறார்கள். அதாவது Electro Magnetic Interference இது ஏற்படக்கூடிய இடங்கள் எது எது என்று எடுத்துக்கொண்டால் அதை ஒரு பட்டியலாகவே போடலாமாம் இந்த EMI தொந்தரவு கேபிள் டி.வியிலே மட்டும்தான் என்று இல்லை.

ராக்கெட் ஏவுதளத்திலே உள்ள ரேடார்கள்... அங்கே உள்ள சில சக்தி வாய்ந்த தொலைத்தொடர்பு சாதனங்கள்... விமானத்தளங்களிலே உள்ள ரேடார்கள்.... கப்பல் தளங்களிலே பொருத்தப்பட்டுள்ள சக்திவாய்ந்த ஆன்டெனாக்கள்... இப்படி நிறைய சொல்லலாம்.

காவல் நிலையங்களிலே பயன்படுத்தப்படுகின்ற வயர்லெஸ் தொடர்பு சாதனங்கள் கூட ஓரளவுக்கு இந்த மின் காந்த அலைகளை வெளியிடும்.நாம் வீட்டில் உட்கார்ந்துகொண்டு ரேடியோ கேட்டுக்கொண்டிருப்போம்... அல்லது டி.வி.பார்த்துக் கொண்டிருப்போம்.

அந்தச் சமயத்தில் பக்கத்துத் தெருவில் ஒரு மோட்டார் சைக்கிள் அல்லது கார்...(குறிப்பாக பெற்றோல் எஞ்சின்) கிளம்பும்போது அதில் உள்ள மின்காந்த மின் கலத்தில் (Magneto Battery) யிலிருந்து பயன்படுகின்ற மின் காந்த அலை இங்கே வந்து டி.வியிலும் ரேடியோவிலும் கரகரப்பை உண்டுபண்ணும்.

இதிலே வந்து பெரிதாக என்ன சிக்கலைப் பண்ணி விடப்போகிறது என்று நாம அலட்சியமாய் நினைக்கலாம். வயதானவர்களுக்கு மறதி நோய் என்ற ஒன்று வருமே.... அல்செமீர்(Alzhemir)அதாவது மூளையில் உள்ள செல்கள் செயலிழந்து விடுகிறது... அது செய்ய வேண்டிய வேலையை மறந்துவிடும்...

மனைவியே எதிரில் வந்து நின்றால் கூட உன்னை எங்கேயோ பார்த்திருக்கேன் என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். அப்படி ஒரு மறதி...இந்த விசித்திரமான நோய்க்கு இது வரைக்கும் மருந்தே இல்லை என்று கூட சொல்கிறார்கள்.

(Micro Oven) என்று சொல்கின்ற அடுப்புக்கள் கூட மின்காந்த அலைகளை வெளியிடுகிறது... சமயத்திலே சில தொழிற்சாலைகளில் கூட பெரிய விபத்துக்களை இந்த EMI உண்டு பண்ணிவிடும். இதைப்பற்றி தீவிரமாக சிந்திக்க ஆரம்பித்ததே ஒரு விபத்துக்குப் பிறகுதான்.

அமெரிக்காவுக்கும் வியட்நாமிற்குமிடையே போர் நடந்த அதே சமயம்... அமெரிக்காவிற்கு சொந்தமான விமானம் தாங்கிக் கப்பல் ஒன்று வியட்நாமைத் தாக்குவதற்குத் தயாராக ஏவுகணைகளோடு கடலிலே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

தற்செயலாக அந்தப் பகுதியில் கப்பல் தொலைத் தொடர்பு பகுதிக்கு அருகில் ஊடுருவிய சக்திவாய்ந்த ரேடியோ அலைகள்... ஏவுகணையிலே இருந்த மின்னனு சர்க்யூட்ஐப் பூர்த்தி செய்து வைத்தது....

அவ்வளவுதான் ஏவுகணை அங்கேயே வெடித்து சிதறிவிட்டது! 130 பேர் அந்த இடத்திலேயே உடல் கருகிச் செத்துப் போனார்கள் ஏகப்பட்ட பொருட்கள் நாசம்.

இந்த விபத்திற்கான காரணம் என்ன என்பதை உடனடியாக யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை! ரொம்பவும் கடுமையாக முயற்சி செய்து கடைசியாக கண்டுபிடித்தார்கள்.... இது EMI வேலைதான் அப்படி என்று!

மின்னனுத் தொலைபேசிகள் இருக்கிறதே...இதில் பேசும் போது நமது செவியை ஊருறுவும் மின்காந்த அலையானது மூளைக்குப் போய் அங்கு மூளைக்கட்டிகளை உருவாக்க ஊக்கம் கொடுக்கிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இந்த EMI மிகவும் குறைந்த மின்காந்த அழுத்தத்தில் நமக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை. மின்காந்த அலைகள் அழுத்தத்தோடு இருக்கிற இடங்களிலே ரொம்ப நேரம் இருந்தோம் என்றால் நமது உடம்பின் வெப்பநிலை 2 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கிறது.

அதனால் வெப்ப நிலையை சீராக்க இதயத்துடிப்பும் அதிகரிக்கிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.இப்போதெல்லாம் இந்த மின்காந்த குறுக்கீடுகளை தடுப்பது எப்படி என்று விஞ்ஞானிகள் யோசனை செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்த விஷயத்திலே அலட்சியமாக இருந்தோம் என்றால் எதிர்காலத்தில் நிறைய்ப்பேருக்கு... அல்செமீர் என்ற மறதி நோய் வந்துவிடும். அப்புறம் அது ரொம்பக் கஷ்டமாகப் போய்விடும்.ஒரு குடும்பத் தலைவர்... தன் மனைவியைப் பார்த்து... "யார் நீ.. உன்னை-எங்கேயோ பார்த்தது மாதிரி இருக்கே....?"என்று சொல்லிக்கொண்டிருந்தார். உடனடியாக அவரைப் போய்ப் பார்த்தேன்.

"வாங்க டாக்டரிடம் போகலாம்!" என்றேன். அவர் என்னைத் தனியாக அழைத்துக் கொண்டுபோய் காதோடு காதாக மெதுவாக சொன்னார்.

"என் கையிலே பணமில்லாத போதெல்லாம் அப்படி... மறதி நோய் வந்தது மாதிரி நடிப்பேன்...அவ்வளவுதான். அதைக் கண்டு கொள்ளாதீர்கள்!" அப்படி என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# "செந்தழல் அடைந்ததுன் மேனி" கணேசமூர்த்தியின் இறுதி அஞ்சலி

## பெருந்திரளானோர் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வெள்ளிக்கிழமை காலை தனது வீட்டில் இருந்து அலுவலகம் நோக்கி சென்றுகொண்டிருக்கையில் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட மக்கள் வங்கி, காங்கேசன்துறை கிளை முகாமையாளர் பொன். கணேசமூர்த்தி இறுதி நிகழ்வு நேற்றுக்காலை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

பேச்சாலும் எழுத்தாலும் புதுமையான கருத்துக்களை ஆணித்தரமாக தெரிவிப்பதாலும் மக்கள் மத்தியில் தனக்கென ஓரிடத்தைப் பெற்றிருந்த பொன் கணேசமூர்த்திக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்கான ஈரவிழிகளுடன் அவரது உற்றார் உறவினர்களும் நண்பர்களும் அனைத்து வங்கி ஊழியர்களும் அவரது ரசிகர்களும் எனப்பெருந்தொகையானோர் அவரது இல்லத்தில் குழுமியிருந்தனர்.

இறுதிக்கிரிகைகளையடுத்து அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு ஆரம்பமானது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவ மகாராஜா தலைமையில் நடைபெற்ற இறுதி அஞ்சலி நிகழ்வில் மக்கள் வங்கி வடவலய பொதுமுகாமையாளரின் இரங்கல் செய்தியை உதவிப்பிராந்திய முகாமையாளர் பத்மநாதன் வாசித்தார்.

இலங்கை வங்கி ஊழியர் சங்க பொருளாளர் என்.ஜி.வில்சனின் இரங்கல் செய்தியை சத்தியமூர்த்தியும், மன்னார் மக்கள் வங்கி உறவுகளின் செய்தியை ஸ்ரீஸ்கந்தராஜாவும் வாசித்தார்கள்.

இறுதி அஞ்சலி உரைகளை இலங்கை வங்கி வட பிராந்திய முகாமையரளர் அருமைநாயகமும், யாழ். பிரதேச முகாமையாளர் சார்பாக உதவிப்பிரதேச முகாமையாளர் குகதாசனும்,

மக்கள் வங்கி முகாமையாளர் சார்பாக ஸ்ரான்லி வீதி கிளைமுகாமையாளர் பாலச்சந் திரனும் மூத்த வங்கியாளர்கள் சார்பாக இளைப்பாறிய பயிற்சி நிலையப்பணிப்பாளர் சுந்தரலிங்கமும், இலங் கை வங்கி ஊழியர் சங்க யாழ்.மாவட்ட கிளை சார்பாக சற்குணபாலனும்,

மக்கள் வங்கி விளையாட்டுக்கழக சார்பாக சுன்னாகம் மக்கள் வங்கி கிளை முகர்மையாளர் சந்திரகாந்தனும், வர்த்தகர் சங்கம் சார்பாக மகாலிங்கமும் கலைவட்டம் சார்பாக பேராசிரியர் சண் முகதாஸும், மக்கள் வங்கி காங்கேசன்துறை கிளை சார்பாக பாலேந்திராவும் நிகழ்த்தினார்கள். (து-15)

# பாலசிங்கத்துடன் இந்திய பிரதிநிதி பேச்சுவார்த்தை சிங்கள ஊடகம் வெளியிடும் திடுக்கிடும் தகவல்கள்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசனைப் பிரிவின் அதிகாரி தொலைபேசியூடாக பேச்சுவார்த்தை நடத்தியதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் யுத்த நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தி யுத்த நிறுத்தத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு விடுதலைப் புலிகளுக்கு இந்திய அரசாங்கம் அழுத்தங்களைக் கொடுத்திருப்பதாக தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் இலங்கை ஜனாதிபதி மஹிந்தவுக்கும் இடையே இலங்கையின் பாதுகாப்பு நிலவரம் தொடர்பாக நடைபெற்ற தொலைபேசி உரையாடலை அடுத்தே இந்தியா இந்த நடவடிக்கையினை எடுத்துள்ளது.

கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் யுத்த நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு இந்தியப் பிரதமரின் கீழ் இயங்கும் தேசிய பாதுகாப்பு ஆலோசனைப் பிரிவினால் லண்டனில் இருக்கும் அன்ரன் பாலசிங்கத்திற்கு செய்தி ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. அந்தப் பிரிவைச் சேர்ந்த முக்கிய அதிகாரி ஒருவர் அன்ரன்பாலசிங்கத்தைத் தொடர்பு கொண்டு மாவிலாறு சம்பவம் தொடர்பில் கேட்டறிந்துள்ளார்.

சமாதானத்திற்காக விடுதலைப் புலிகள் இதனைவிட அர்ப்பணிப் புடன் செயற்படவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். இதனையடுத்து விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவருடன் அன்ரன் பாலசிங்கம் தொலைபேசியில் தொடர்புகொண்டு இந்த நிலைமை குறித்துப் பேசியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

மஹிந்தவுக்கும் மன்மோகன் சிங்குக்கும் இடையேயான தொலைபேசி உரையாடலின் போது மாவிலாறு சம்பவத்தை யுத்தத்தை நோக்கிக்கொண்டு செல்லாது அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

யுத்த சூழ்நிலையில் இலங்கையிலிருந்து அகதிகள் இந்தியாவிற்கு வருவது தங்களுக்குப் பெரும் பிரச்சினையாகியுள்ளது என்றும் இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளதாக அந்த ஊடகச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# சமுர்த்தித் திட்டத்தால் கூட ஒழிக்க முடியாத வறுமை தென்மராட்சி நிலை பற்றி சமூக ஆர்வலர்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் பின்தங்கிய கிராமங்களில் வாழ்கின்ற நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வறுமையில் வாடிவருகின்றன எனவும் இதனால் இத்தகைய குடும்பங்களில் இருக்கின்ற பாடசாலை செல்கின்ற வயதினர் பாடசாலைகளுக்கு ஒழுங்காகச் செல்வதில்லை என அறியப்படுகின்றது.

இத் தகைய பிள்ளைகள் பயில்கின்ற பாடசாலைகளின் அதிபர்கள் ,ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு வராமல் இருக்கின்ற பிள்ளைகள் பற்றிய தகவல்களை அவ்வப்போது திரட்டி வருகின்றனர். இதன் அடிப்படையில் எத்தகைய வருமானமும் இல்லாத நிலையில் இருக்கின்ற குடும்பங்களின் தாய்மார்கள் தமது பிள்ளைகளை வேறு பிரதேசங்களுக்கு நாளாந்தம் அனுப்பி "பிச்சை" எடுக்கும் தொழிலில் ஈடுபடுத்தி வருவது தெரியவந்துள்ளது.

அதன்மூலம் பிள்ளைகளால் கொண்டுவரப்படும் பணத்தைக் கொண்டுதான் குடும்பங்களின் உணவுத் தேவைகள் ஓரளவு பூரணப்படுத்தப்பட்டு வருகின்றது. வறுமையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் தலைவர்கள் எனச் சொல்லப்படுவோர் தமது குடும்பங்களைக் கவனிக்காமல் குடிப்பழக்கத்தில் மூழ்கி இருந்து வருகின்றனர் எனவும் கூறப்படுகிறது.

இதேசமயம் யாழ்ப்பாணமாவட்டத்தில் வறுமை ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு அம்சமாகக் கருதப்படும் 'சமுர்த்தி திட்டத்தின்' மூலமாகக் கூட வறுமையினால் பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பங்களை வறுமையின் கோரப்பிடிக்குள் இருந்து மீட்டெடுக்க முடியாமல் இருக்கின்றது.

இந்த வகையில் சமுர்த்தி திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்ற சமுர்த்தி நிவாரணம் கூட வறுமையில் வாடுகின்ற குடும்பங்களைக் கூட வாழவைக்க முடியாமல் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்த நிலையில் யாழ்பாண மாவட்டத்தில் வறுமை ஒழிப்புத் திட்டமானது பேச்சளவில் மட்டுமே இருக்கின்றமை அம்பலத்துக்கு வந்துள்ளது.

மாவட்டத்தில் வறுமைப் பிரச்சினை மிகவும் தாக்கமுள்ள பிரச்சினைகளுள் ஒன்றாக இப்போது இருந்து வருவதால் வறுமையை ஒழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுதல் அவசிய தேவைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது என சமுதாய ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (து-16)

# பிறப்பு, திருமணப் பதிவுகள் இல்லாத குடும்பங்கள்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் பிறப்பு-இறப்பு மற்றும் திருமணப் பதிவுகளை இதுவரை மேற்கொள்ளாத நிலையில் ஆயிரக்கணக்கானவர்கள் இருந்து வருகின்றனர் என அண்மைய தகவல்கள் மூலம் தெரியவருகின்றது.

பின் தங்கிய கிராமங்களில் வாழ்ந்து வருகின்ற படிப்பறிவற்ற குடும்பங்களிலேயே இத்தகைய குறைபாடுகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் இல்லாத காரணத்தால் பிள்ளைகளைக் கல்வி கற்கப் பாடசாலைகளுக்கு அனுப்ப இயலாத நிலையில் இருப்பதாக அறிய வந்துள்ளது.

இதேசமயம் கிராமிய மட்டத்தில் இருக்கின்ற குடும்பங்கள் மத்தியில் திருமணப்பதிவுகள் மற்றும் இறப்புப் பதிவுகளையும் மேற்கொள்ளாமல் இருக்கின்றமையும் தெரியவந்துள்ளது. (து-6)

# கிரவல் வீதிகளாக மாறும் தார் வீதிகள்
## பூநகரி - பரந்தன் வீதியின் பரிதாப நிலை

போர்ச்சூழல் ஏற்பட்ட காலத்தில் இருந்து திருத்தங்கள் ஏதும் செய்யப்படாத நிலையில் இருந்த வீதிகள் மன்னார் -சங்குப்பிட்டி, பூநகரி பரந்தன் வீதிகளாகும். இவ்வீதிகள் முன்னர் கல் போடப்பட்டு தார் பூசப்பட்ட வீதிகளாக இருந்தது.

காலப்போக்கில் சிறப்பு கிரவல் இடையிடையே போட்டு தற்காலிகமாகத் திருத்தப்பட்டு இப்போது முழுவீதிகளுமே சிறப்பு கிரவல் வீதிகளாக மாறியுள்ளது. முழங்காவில், வலைப்பாடு, கிராஞ்சி ஆகிய பகுதிகளில் உள்ள வீதிகளையும் கிரவல் போட்டு மூடி மறைத்து தார் பூசுவதனைவிட கல்போட்டு தார் இடுவது சிறப்பாக அமையும் ஆதலால் உரிய நடவடிக்கைகளை அரச திணைக்களங்கள் மேற்கொள்ளுமா என பொதுமக்கள் ஆதங்கப்படுகின்றனர்.

பூநகரி-பரந்தன் குடமுருட்டி ஆற்றுப் பாலம் இன்னமும் பூரணமாக போட்டு முடியாத நிலையில் காணப்படுகின்றது. இங்கு வீதிகளின் திருத்தவேலைகள் மந்த கதியில் நடைபெறுகின்றது. இவ்வீதியை சிவப்பு கிரவலால் மூடுகின்றனர். கிரவல்போட்டு தார் பூசும் போது ஈரம் காணப்பட்டால் தாரில் ஒட்டும் தன்மை இல்லாது போய் விடும் கோடை காலத்தில் வீதியை செப்பனிடும் வேலையை துரிதமாக முடிக்காது மழைகாலத்தில் செய்வதால் வீதியில் இடப்படும் தார் வீணாக அதிக நாள் பயன்படாது போகும்.

மக்களின் வீடுகள் கூரைகள் மூக்குதுவாரம் ஊடாக சிவப்பு மண் தூசுகள் செல்வதால் இப்பகுதி மக்களில் அநேகமானோர் அஸ்மா நோயை புதிதாக எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே இயன்றவரை இவ்வீதிகளை கல் போட்டுதார் ஊற்றவழி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை எனப் பொது மக்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். (து-102)

# காணாமல் போனதாக முறைப்பாடு

சாவகச்சேரிக்குச் சென்ற ஒரு குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும், மகனும் வீடு திருப்ப வில்லை என யாழ்.மனித உரிமை ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விநாயகர் வீதி நல்லூர் வடக்கைச் சோந்த செல்லத்துரை சோதிலிங்கம்(வயது 35), சோதிலிங்கம் வசந்த் (வயது 14) ஆகியவர்கள் இம்மாதம் 1 ஆம் திகதி சாவகச் சேரி சென்றவர்கள் காணாமற் போயுள்ளதாக அவரது மனைவி யாழ். மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (து-15, 133)

# படுகொலைகளுக்கு ஈ.பி.டி.பி. கண்டனம்

மூதூர் மற்றும் தோப்பூர் ஆகிய பகுதிகளில்ஷெல்வீச்சில் பலியாகிய முஸ்லிம் சகோதரர்கள் மீதான படுகொலைகளை ஈ.பி.டி.பி.மிகுந்த வேதனையோடு கண்டிக்கிறது என ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

இரு தரப்பு மோதல்கள் காரணமாக தங்கள் உயிர்களைக் காத்துக் கொள்வதற்காக தஞ்சம் தேடி ஓடி அவசரமனிதாபிமானஉதவியோ, உணவு வசதியோ இல்லாத நிலையிலும் உயிரைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு மக்கள் ஒதுங்கியிருந்த மூதூர் நத்வத்துல உலமா அரபுக் கல்லூரி மற்றும் தோப்பூர் அல் நூரியா அரபுக் கல்லூரி மீதும் ஷெல் வீச்சை நடத்தியது மிலேச்சத்தனமானதாகும்.

இவ்விரு சம்பவங்களிலும் 28 பேர் பலியாகியும், 79பேர் காயமடைந்துமுள்ளனர். இறந்தவர்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதில் ஏற்பட்ட சிரமங்கள் ஒரு புறமிருக்க, காயப்பட்டவர்களுக்கான சிகிச்சை வசதிகள் கிடைப்பதிலும் அந்த மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் கவலை தருவதாக உள்ளன.

இந்த நிலைமையைக் கவனத்தில் கொண்டு ஆயுத மோதலில் ஈடுபட்டுள்ள தரப்புகள் சுமுக நிலைமையைத் தோற்றுவிக்க உதவ வேண்டும். தாக்குதல்களையும் ஈ.பி.டி.பி. கண்டிக்கிறது. இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவக்கூடிய நிலைமை உருவாக்கப் படவேண்டும் என அப்பத்திரிகைக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

# ஸ்ரீ பழனி ஆண்டவர் வேல் பவனி

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீபழனி ஆண்டவர் ஆலய வருடாந்த மகோற்சவ தினத்தின் 15ஆவது நாளாகிய நாளைய தினம் ஸ்ரீ பழனி வேல்பவனி விழா நடைபெறவுள்ளது.

நகர கிராம சேவையாளர் வை.இராசரத்தினம் தலைமையில் பி.ப.1.30 மணிக்கு ஆரம்பமாகும் மேற்படி நிகழ்வில் ''சிவத்தமிழ் சொல்லழ்கர்'' ச.லலீசன் ஆசிரியர் பிரதம விருந்தினராகவும் இந்து சமய அபிவிவிருத்தி உதவியாளர் செல்வி சீ.மகிந்தினி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார் கள்.

ஆலய வேல்பவனி டச்சுவீதி வழியாக பருத்தித்துறை வீதிக்கு வந்து செருக்கல் ஒழுங்கைவழி யாக ஆலயத்தை வந்தடையும். பவனியில் அறநெறி மாணவர்களது கலை நிகழ்ச்சியும் இடம்பெறும். (து-29)

# சனிக்கிழமை நடைபெறவுள்ள 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை ஏற்பாடுகள் பூர்த்தி

(கொழும்பு)

எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

2 ஆயிரத்து 633 பரீட்சைநிலையங்களில் இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளது. 2 இலட்சத்து 31 ஆயிரம் சிங்கள மொழிமூல மாணவர்களும், 70ஆயிரத்து173தமிழ்மொழி மூல மாணவர்களும் பரீட்சைக்கு தோற்றுகின்றனர்.

வலய மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர்களின்வேண்டுகோளுக்கிணங்க கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மாணவர்களுக்கு விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும். இதேவேளை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள சாதாரண தகவல் தொழில்நுட்ப பரீட்சையை நடத்துவதற்கும் சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (து-9)

# நாட்டார் கலைகளைத் காக்க முயல்வோம்!

தமிழர்களின் நாட்டார் கலை இலக்கியங்களான நாட்டுக்கூத்து, நாட்டார் பாடல்கள் போன்ற கலை வடிவங்கள் அழிவடைந்து வருவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

சமூக, கால மாற்றங்களுக்கேற்ப சினிமா மற்றும் தொலைக்காட்சி தொடர் போன்றவற்றில் மக்கள் நாட்டங் கொண்டிருப்பதால் நாட்டார் கலை இலக்கிய வடிவங்கள் அழிவை நோக்கி அடியெடுத்து வைக்கின்றன. மேலும் நாட்டுக்கூத்துக் கலைஞர்களுக்கான தட்டுப்பாடு, மேடையேற்றுவதற்கான செலவை தனியொருவரே ஏற்க வேண்டிய நிலை என்பவற்றாலும் எஞ்சியுள்ள கலைஞர்களும் நாட்டார் கலைகளில் நாட்டம் கொள்வது குறைவடைந்துள்ளது.

சங்கீதம், நடனம் போன்ற வேத்தியல் கலைகளை எல்லோரும் எளிதாக புரிந்து கொள்வதற்காக எளிமைப் படுத்தியதால் பிறந்த பொதுவியல் கலைகளே நாட்டார் கலைகள். இந் நாட்டார் கலை இலக்கியத்தில் வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, அற்புதம், நகை, சோகம் சிருங்காரம் போன்ற சுவைகள் உள்ளிடக்கியதாக புராண, இதிகாச வரலாற்றுக்கதைகள் கூத்து வடிவில் கூறப்பட்டு வந்தன்.

இன்றைய இளந்தலைமுறை புராண, இதிகாச கதைகள், அறியாமையில் இருந்து பிறந்த பிரமிப்பூட்டும் அமியலசிய கற்பனைக் கதைகள் என்று கருத முற்படுவதாலும் நாட்டார் கலை வடிவங்கள் அழிவடைந்து வருகின்றன.

நாட்டுக் கூத்தை தவிரவும் குழந்தைகளுக்கான் தாலாட்டுப் பாடல், மரணச் சடங்குகளில் கூறப்படும் ஒப்பாரி அழுகை போன்றவை கூட ஒருவகையான நாட்டார் கலைகளே. இன்று இவற்றைக் கூட கேட்க முடியாத நிலை தோன்றி வருவதாகவும் கலை இலக்கிய ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கலைகளின் போக்கும், நோக்கும் காலங்களுக்கேற்ப மாறுபடினும் அம் மாற்றங்களை உணரக்கூறிய மனப் பக்குவம் இருந்தால் எக்கலையையும் எக்காலத்திலும் ரசிக்கமுடியும் எனவே நாட்டார் கலைகளையும் காலத்திற்கேற்ற வாறு முன்னெடுத்து அவற்றை அழிய விடாது பேணிக்காக்க முன் வருமாறு கலைஞர்கள், ரசிகர்களுக்கு நாட்டுக் கூத்து அண்ணா விமார்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (து-36)

# தொடரும் சட்டவிரோத நடவடிக்கைகள்

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேசத்திலுள்ள கரம்பொன், பாலக்காடு, ஒழுவில் பகுதியில் தொடர்ந்து மண், கல் அகழ்வு நடைபெற்று வருகின்றது. பன்ன மரங்களும் சட்டவிரோதமான முறையில் தறிக்கப்படுகின்றன.

அண்மையில் காரைநகர் பகுதியில் பனை மரங்கள் சட்ட விரோதமாக தறிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது அவ்விடத்துக்கு கிராம அலுவலர் செல்லவே தறித்துக் கொண்டிருந்தவர்கள் ஓடிவிட்டதாக கூறப்படுகின்றது. (து-72)

# பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி
# கேள்வி அறிவித்தல் -2006

அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளை நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் (ICTAD M 9) சமர்ப்பிக்கப்படக்கூடிய ஒப்பந்தக்காரர்களிட மிருந் தும் இவ்வேலையை நிறைவேற்றக்கூடிய தகுதியுடையதென சான்றிதழ் சமர்ப்பிக்கக் கூடிய அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள்/நிறுவனங்கள்/பொது அமைப்புக்கள் ஆகியவற்றிடமிருந்தும் கேள்விகள் கோரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| படிவ விநியோகம் | 14.08.2006 | பிற்பகல் | 3.00 மணிவரை |
| படிவம் ஏற்றல் | 17.08.2006 | நண்பகல் | 12.00 மணிவரை |
| படிவம் திறத்தல் | 18.08.2006 | பிற்பகல் | 2.00 மணிக்கு |

| வேலை விபரம் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் | வற்வரி |
|---|---|---|---|
| 01. மேலைப்புலோலி பாடசாலை வீதி புனரமைப்பு | 6000/- | 300/- | 45/- |
| 02. ஆண்டிபபனை வீதி புனரமைப்பு | 4500/- | 300/ | 45/- |
| 03. குடத்தனை பொது நூலகம் திருத்தம் | 3500/- | 300/- | 45/- |
| 04. நாய் அழிக்கும் தொட்டி நிர்மாணம் | 1700/- | 300/- | 45/- |
| 05. பொதுக்கிணறு நிர்மாணம் குடத்தனை மேற்கு | 1250/- | 300/- | 45/- |
| 06. பொதுக்கிணறு நிர்மாணம் வலிக்கண்டி | 1250/- | 300/- | 45/- |
| 07. பொதுச்சந்தை மலசலகூட நிர்மாணம் செம்பியன் பற்று மருதங்கேணி | 1000/- | 100/- | 15 |
| 08. செம்பியன்பற்று உப அலுவலக மலசலகூட நிர்மாணம் மருதங்கேணி | 1000/- | 100/- | 15 |
| 09. மலசலகூடமும் சந்தையும் புனரமைப்பு கெருடாவில் | 1000/- | 100/- | 15 |
| 10. மருதங்கேணி விளையாட்டு மைதான கிணறு புனரமைப்பு | 750/- | 100/- | 15 |
| 11. செம்பியன்பற்று தெற்கு மயான கிணறு நிர்மாணம் | 750/- | 100/- | 15 |
| 12. மருதங்கேணி தெற்கு மயான கிணறு நிர்மாணம் | 550/- | 100/- | 15 |
| 13. கிராமக்கோட்டு சந்தை எல்லை முட்கம்பி வேலி அமைத்தல் புலோலி | 200/- | 100/- | 15 |
| 14. புலோலி பொது நூலக எல்லைச்சுவர் புனர்நிர்மாணம் | 1500/- | 300/- | 45/- |

கேள்விகள் யாவும் மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடதுபக்க மேல் மூலை யில் கேள்வியின் பெயர் குறிப்பிட்டு 'செயலாளர், பருத்தித்துறை பிரதேச சபை புலோலி' என்ற முகவரியிடப்பட்டு பதிவஞ்சல் மூலமோ அன்றி சபையின் கேள்விப் பெட்டியில் சேர்ப்பதன் மூலமும் இணைப்பிரதி 'பிராந்திய உள்ளூராட்சி உதவியாளர் யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்புவதன் மூலமும் கிடைக்கச் செய்தல் வேண்டும் கேள்வி சம்பந்தமான விடயங்களில் கேள்விச் சபையின் முடிவே இறுதியானதாகும். மேலதிக விபரங்களை காரியாலய நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பருத்தித்துறை பிரதேச சபை
புலோலி.
04.08.2006

(C/419)

*சிதம்பரப்பிள்ளை பசுபதி*
*செயலாளர்.*
*பருத்தித்துறை பிரதேச சபை*
*புலோலி.*

# போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு
## நியூசிலாந்து நாட்டவர்?

(கொழும்பு)

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிலிருந்து ஐரோப்பிய ஒன்றிய நாட்டுப் பிரதிநிதிகள் விலகியதையடுத்து ஏற்பட்டிருக்கும் வெற்றிடத்திற்கு சுவிற்சர் லாந்து மற்றும் நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்களை ஈடுபடுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மொத்த கண்காணிப்புக் குழு உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் வெளியேறியிருப்பதனால் கிழக்கில் போர்நிறுத்த நடவடிக்கைகள் பெயரளவிலேயே இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஒரு மாத காலத்திற்குள் சுவிற்சர்லாந்து மற்றும் நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்களை போர்நிறுத்த கண்காணிப்பாளர்களாக கடமையில் ஈடுபடுத்தாவிடில் போர் நிறுத்தத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக போர்நிறுத்த உடன்படிக்கையை திருத்தி புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியேற்படும் என கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தகவல் தெரிவித் துள்ளன. (து)

# பயங்கரவாத அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள அரசாங்கம் தயார்

## கலந்துரையாடல் நிகழ்வில் ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

எந்த பயங்கரவாத அச்சுறுத்தலையும் எதிர்கொள்வதற்கு அரசாங்கம் தயார் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பயங்கரவாத இயக்கம் செயற்படும் விதத்தில் அரசாங்கத்தால் செயற்பட முடியாவிட்டாலும் ஒரு போதும் பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு அடிபணிவதற்கு அரசாங்கம் தயாராக இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இலத்திரனியல் ஊடகங்களில் அஞ்சல் செய்யப்பட்ட கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

மாவிலாறு வான் கதவை மூடியதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர். இது சம்பந்தமாக அவர்கள் முன்வைக்கும் கருத்துக்களை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

எனவே மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக இப்பிரச்சினையில் அரசாங்கம் தலையிட வேண்டியுள்ளது. எந்த இனத்தை சேர்ந்தவர்களாக இருந்த போதிலும் அவர்களை பாதுகாப்பது அரசாங்கத்தின் கடப்பாடாகும்.

மூதூரின் தற்போதைய நிலைமை குறித்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, தமிழீழ விடுதலைப்புலிகள் தற்போது யுத்த நிறுத்தம் குறித்த கருத்துக்களை முன்வைத்த போதும் கடந்த காலங்களில் அவர்களால் யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்படாதா என்பதில் சந்தேகம் நிலவுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கை குறித்த பல பொய்யான செய்திகள் பரவியுள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தில் சகல மக்களும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்ட ஜனாதிபதி அவ்வாறு நடந்து கொள்ளாத பட்சத்தில் எதிரிகளின் நோக்கம் வெற்றியடையும் என்று கூறினார்.

பயங்கரவாத அச்சுறுத்தல் இடம்பெற்று வந்த போதிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை இடை நிறுத்துவதற்கு அரசாங்கம் ஒரு போதும் தயாரில்லை பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் அரசாங்கம் கடந்த காலங்களில் 8 சதவீத மான பொருளாதார வளர்ச்சியை வழிநடத்திச் சென்றுள்ளது. வேலையற்றோர் வீதம் குறைந்துள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதி கரித்துள்ளமை தொடர்பிலும் அர சாங்கம் கவனம் செலுத்தி வருவதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (து-9)

## மூதூரில் புலிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்த அதிகாரிகள் இன்றி தவித்த பொலிஸ்

(கொழும்பு)

மூதூர் நகருக்குள் விடுதலைப் புலிகள் நுழைந்து தாக்குதல் நடத்திய போது அவர்களுக்கு எதிராக பதில் தாக்குதல் நடத்த உத்தர விடுவதற்கும் இலங்கை பொலிஸாரை வழி நடத்து வதற்கும் எந்தவொரு பொறுப்பு வாய்ந்த அதிகாரியும் மூதூரில் இருந்திருக்கவில்லை எனக் காவல் துறை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூதூரில் நிரந்தரமான உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் இருக்க வேண்டிய போதிலும் சுமார் 5 மாதங்களாக அந்தப் பதவி வெற்றிடமாக இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

விடுதலைப்புலிகள் மூதூரில் தாக்குதல் நடத்திய போது மூதூர் காவல் நிலையப் பொறுப்பதிகாரி திருகோணமலையில் நடந்த பொலிஸ் அதிகாரிகளின் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றிருந்தார்.

மூதூரில் நிலைமை மோச மாக இருந்ததால் அவரால் மூதூருக்குச் செல்ல முடியாதிருந்ததாக கூறப்படுகிறது. (து)

## இராசி பலன்

**07.08.2006**
**(ஆடி 22, திங்கட்கிழமை)**
திரயோதசி முன்னிரவு 9.15 மணிவரை
பூராடம் முன்னிரவு 9.13 மணிவரை
இராகுகாலம் 7.34-9.04 மணிவரை
சுபநேரம் 12.04-1.34 மணிவரை
பிரதோச விரதம்

| | |
|---|---|
| ...ம் | பெரியோர் வாழ்த்து, கட்டுப்பாடு, சரீரப் பிரயாசை, காரிய தாமதம். |
| இடபம் | பிரயாண பயம், எடுத்த காரியம் தாமதமாகும், சகோதரர் உதவி, வீண்பகை. |
| மிதுனம் | களஸ்திர நன்மை, கௌரவமான நிலை, உடல்நலம், பொருள் சேர்க்கை. |
| கடகம் | மனமகிழ்ச்சி, சத்துரு ஜெயம், முயற்சி கைகூடும், போசனசுகம். |
| சிங்கம் | சிறுவியாதி, மனச்சோர்வு, எடுத்த கருமங்கள் தாமதமாகும், பகைவிரயம். |
| கன்னி | மனப்பயம், தொழில்விருத்தி, வாக்கு மேன்மை, முயற்சி தாமதம். |
| துலாம் | வாகன சுகம், முயற்சி கைகூடும், வாக்கு மேன்மை, இனிய நிகழ்வு. |
| விருச்சிகம் | விவாதம், தனவிரயம், குடும்பக் கவலை, பித்தரோகம். |
| தனுசு | பெரியோர் ஆதரவு, தெய்வசிந்தை, நல்ல முயற்சி, உறவினர் வருகை. |
| மகரம் | எடுத்த காரியம் தாமதமாகும், மனச்சோர்வு, பிரயாணம், ரோக நிலை. |
| கும்பம் | குடும்ப சுகம், தெய்வநம்பிக்கை, காரிய அனுகூலம், நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | அதிகபிரயாசை, போசனசுகம், தன்னம்பிக்கை, ஆரோக்கியம். |

- வளவன்

## அச்சத்துடன் பணியாற்றும் தொண்டு நிறுவனங்கள்

(திருநெல்வேலி)

குடாநாட்டில் பணிபுரியும் தொண்டு நிறுவனங்கள் மிகுந்த அச்சத்துயினேயே பணியாற்ற வேண்டியுள்ளதாக பெயர் குறிப்பிட விரும்பாத தொண்டு நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் ஆட்கள் காணாமல் போதல், கைதுகள், படுகொலைகள் என்பன அதிகரித்து வரும் சூழ்நிலையில் தங்களால் மக்களுக்குத் திருப்திகரமாக சேவை ஆற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதியில் கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் பணியாளர்கள் மிகவும் நெருக்கடியான சுழலில் பணியாற்றுவதாகவும் நாகர் கோவில் படைத்தளத்தில் இருந்து ஏவப்படும் ஷெல்களால் இப்பகுதிகளில் குறிப்பாக மாமுனை, செம்பியன் பற்று பகுதிகளில் மீள் கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் நிறுவன பணியாளர்களும், ஊழியர்களும் மிகுந்த அச்சத்துடன் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(து-43)

## ஆயுளை நீடிக்கும் ஆயுர்வேத மருத்துவம்

(சாவகச்சேரி)

"நோய்கள் வராது தடுப்பதும் வந்த நோய் களை அடியோடு வேரறுத்து ஆறளை நீடிப்பதுமே ஆயுர்வேத மருத்துவத்தின் சிறப்பாகும்.


பக்கவிளைவுகள் அற்ற ஆயுர்வேத சிகிச்சையைப் பெற்று மக்கள் நோய்நொடி அற்ற பூரண ஆயுளைப் பெறவேண்டும்" என தென்மராட்சிப் பிரதேச சனசமூக உத்தியோகத்தர் திருமதி ஜெ.செல்வராணி தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி பிரதேசசபையின் சரசாலைப் பணிமனையில் இலவச ஆயுர்வேத சிகிச்சை நிலைய திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட மேற்படி நிகழ்வுக்கு பிரதேச செயலர் கு.ந.பாலச்சந்திரன் தலைமை வகித்தார். சிகிச்சை நிலையத்தை ஆசிரியர் ஸ்ரீசக்திவேல் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார்.

அன்றைய தினமே பல பொதுமக்கள் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்றுச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (து-29)

## நல்லூரான் திருவடிக்கு இன்று ஒன்பதாம் திருவிழா



### நல்ல வரம் தந்திடுவாய்!



நல்லூரின் வேலவனே
நல்ல வரம் தந்திடுவாய்!
ஆறுமுக வேலவனே
ஆறுதலைத் தந்திடுவாய்!
பன்னிருகை வேலவனே
பாரிலெமைக் காத்திடுவாய்!
வேலோடு வந்தவனே – எம்
வேதனைகள் தீர்த்திடுவாய்!
மயில் மீது அமர்ந்தவனே – எம்
மனக்குறையை மாற்றிடுவாய்!
விநாயகர்குப் பின்னவனே – எம்
வினை எல்லாம் தீர்த்திடுவாய்!
அசுரர் குடி வென்றவனே–நின்
அருளைத் தந்திடுவாய்!
திக்கெல்லாம் போற்றும் திருமுருகா
திருவருளால்எங்கள் தீவினைகள் போக்கிடுவாய்!

நல்லூர் கிருபா

### அலங்காரக் கந்தனுக்கு அரோகரா



அலங்காரக் கந்தனுக்கு அரோகரா!
ஆறுமுக சுவாமிக்கு அரோகரா!
துலங்காக்கும் குமரனுக்கு அரோகரா!
குஞ்சரியர் நாதனுக்கு அரோகரா!
நலங்காக்கும் வேலனுக்கு அரோகரா!
நல்லைநகர் கந்தனுக்கு அரோகரா!
நிலம் காக்கும் அப்பனுக்கு அரோகரா!
நிலை வாழ்வைத் தருவோனுக்கு அரோகரா!

அ.கலாநிதி

### செந்தமிழ் சேயே போற்றி!

தேவரின் இடரைத் தீர்த்து
தேனினும் இனியனாகி
பாவமே இனபூத்த சூரன்
பழியெலாம் தானே தாங்கி
சேவலும் மயிலு மாகி
செய்தவ (று) றுணர்ந்த பத்மன்
சேவகம் செய்ய வைத்த
செந்தமிழ் சேயே போற்றி!

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

### திருமுருகா திருவருள் தருவாயே!

*அருணகிரி நாதருக்கு அருள்புரிந்து உன்தன்மேல்*
*திருப்புகழைப் பாடவைத்த பெருங்கருணைப் பெருமானே*
*திருத்தலமாம் நல்லையிலே திருக்கோவில் கொண்டவனே*
*திருமுருகா தீர்வொன்று தருவாயே நிறைவாக!*


நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்

## நாவலர் மணிமண்டபத்தில் ஆன்மீகச் சொற்பொழிவு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நல்லூர் உற்சவ கால ஒன்பதாம்நாள் நிகழ்வான 'ஆன்மீக சிந்தனையுடன் கூட்டுப் பிரார்த்தனை' நிகழ்வு இன்று பி.ப 3 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் 'கோமாதாவின் மகிமை' என்னும் தலைப்பில் சிவஸ்ரீ சிவலோகநாததேசிகர் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். ஏழாலை ஆத்ம ஜோதி தியான மண்டப அறநெறிப் பாடசாலை மாணவர்களினதும் அராலி கோகுலம் அறநெறிப் பாட சாலை மாணவர்களினதும், கூட்டுப் பிரார்த்தனையும் இடம் பெறும். (அ-133)

# சுற்றாடல் பாடத்தைக் கற்கத் துணைசெய்யும் "சுற்றாடல் கீதம் தரம் - 2"




ஆரம்ப வகுப்பு மாணவர்கள் எளிமையான முறையில் சுற்றாடல் பாடத்தைக் கற்கத் துணைசெய்யும் நோக்கில் 'சுற்றாடல் ஓர் அறிமுகம்' என்னுந் தலைப்பிலான ஒலிநாடாவும், இறுவட்டும் சமீபத்தில் வெளிவந்துள்ளன. தரம் இரண்டுக்குரிய கலைத்திட்டத்திற்கமைவாகப் பதினாறு அலகுகளை உள்ளடக்கிய, இசைப்பாடல் வடிவில் இவை அமைந்துள்ளன. பொருண்மையும், எளிமையும், இசையினிமையும் நிறைந்த பாடல்கள் சிறுவர்களின் மனங்களை ஊடுருவிச் சென்று நிலைத்து நிற்கத்தக்கவையாகும். இதையுணர்ந்தே கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றும் செல்வி மலர் சின்னையா (செம்பியின் செல்வி) தனது கல்விசார் பணிகளின் தொடர்ச்சியாக இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

'நாங்கள் வாழும் வீடு' எனத் தொடங்கும் அலகுடன் ஆரம்பித்து, 'நாம் உதவி செய்வோம்' என்னும் இறுதியலகுடன் இச் சுற்றாடற் பாடல்கள் ஒலிக்கின்றன. முதலில் சுருக்கமான அறிமுகப்பாடலும், பின்னர் அலகுகளின் தலைப்பைக் கூறிவிட்டு அவைசார்ந்த விடயங்களும் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

'நாமும்பாடசாலையும்', 'எமதுவீடு', 'தோட்டத்துக்கு வரும் பிராணிகள்', 'நீருடன் விளையாட்டு', 'சித்திரைப் புத்தாண்டு', 'வானம்', 'நாம் உண்பனவும் குடிப்பனவும்' என அலகுகளுக்கேற்ப பதினாறு பாடல்களும் இனிய இசையுடன் விரிவடைந்து செல்கின்றன. சந்தப் பிறழ்வின்றி குரலொலிப்பு மனதை மகிழ்விக்கிறது. நாட்டாரிசையையும், மெல்லிசையையும் தழுவியே இசைக்கோர்ப்பு அமைந்துள்ளது.

மாணவர்கள் பாடப் புத்தகமின்றியே பயிலக்கூடியதாக இவ்வொலி நாடாவும், இறுவட்டும் கற்றற் சாதனங்களாகத் துணை செய்கின்றன. சிறுவர்களுக்கான கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகள் கவர்ச்சியும், ஈர்ப்பும் நிறைந்த சாதனப் பிரயோகத்துடன் அமைந்தால், பெறுபேறுகள் நல்லவையாக விளங்குமெனக் கல்வியியலாளர்கள் கருதுகின்றனர். அதற்கேற்றாற்போல கற்றலுக்கும், கற்பித்தலுக்கும் வழிகாட்டும் சாதனமாக இவற்றைக் கருதமுடிகிறது.

'இந்த ஒலிநாடாவும், இறுவட்டும் ஆசிரியர், மாணவர் ஆகிய இருதரப்பினருக்கும் முறையே கற்கவும், கற்பிக்கவும் உதவக்கூடியவை. கற்பித்தலை எளிமையாக்கத் துணை நிற்பவை. கல்வி நோக்கங்களை எய்துவதற்கு வழிசமைப்பவை.

'எங்கள் பாதம் படும் சூழல் எம் உரிமை மண்ணாய் இருக்கிறது'

'பள்ளிக்கு நாங்கள் வந்துவிட்டோம்
பாடங்கள் படிக்க விரும்பி வந்தோம்'

'அன்பாய் ஆசான் இருக்கின்றார்- எம்
வகுப்பறை மகிழ்ச்சியாய் இருக்கிறது'

ஆகிய ஒலிநாடாவிலுள்ள பாடல்வரிகள் கற்றலின் தூய நோக்கத்தைப் புலப்படுத்தும் சில உதாரணங்களாகும். மேலும்

'எங்கள் வீடு அன்புமயம்- அதில்
அம்மா அப்பா இன்பமயம்'

'தேனீக்கள் தோட்டத்தில் தேனெடுக்கும்- பச்சைக்
கிளிகள் காய்களைப் பறித்துண்ணும்
குரங்குகள் தாவி வந்துவிடும்- காய்
கனிகளை முறித்துத் தின்றுவிடும்'

'எத்தனை எத்தனை மாற்றங்கள்- இந்த
இயற்கையில் ஏற்படும் மாற்றங்கள்
அற்புதம் அற்புதம் அவையனைத்தும்- அதை
இயக்கிடும் நாயகர் யார்? எவரோ?'

என வரும் பாடலடிகள் பொருளாலும் இசை மெட்டுக்களாலும் சிறுவரைக் கவரக் கூடியனவாகும். ஆரம்ப வகுப்பு மாணவர்கள் இயல்பாகவே இசைப் பாடல்களின் வசீகரத்துக்கு உட்படுவார்கள். கடினமான விடயங்களையும் எளிமையாக இசை கலந்து அவர்களுக்குக் கற்பிக்க முடியும். அத்தகைய உத்திகளை தரம் இரண்டு சுற்றாடல் பாடத்திற்குப் பயன்படுத்தியதில் செல்வி மலர் சின்னையா வெற்றி காண்பார் என்பது உறுதி.

'திறமைகள் வளரக் கைகொடுப்போம் - எம்
சிந்தனைகள் உயரக் கற்றிடுவோம்'.

என்ற பாடலடிகள் சிறுவர் கல்வியில் மகிழ்ச்சியும் ஆர்வமும்மிக்க கற்பித்தலுக்கும், சிந்தனை வளர்ச்சிக்கும் வழிகாட்டுகின்றன. சிறுவர்கள் விரும்பும் வண்ணம் ஓசைச்சிறப்பு, குரலினிமை எளியபொருள் ஆகியவை பாடல்களில் ஒருங்கிணைந்துள்ளன. பாடலாசிரியரும் இசையமைப்பாளரும் ஆகிய செல்வி மலர் சின்னையாவின் மாணவிகளான சிலேகா, நகுலா, சூரியா ஆகியோர் பாடல்களைப் பாடியுள்ளனர். அவரது மாணவர்கள் விமல்சங்கர், கேதீஸ் ஆகியோர் அணிசெய் வாத்திய இசைக்கலைஞர்கள்.

செல்வி சின்னையா கால்நூற்றாண்டுக்கு மேற்பட்ட கற்பித்தல் அனுபவம் வாய்ந்தவர். ஆசிரியராக, அதிபராக, ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராகத் தமது கல்விப்பணியினை விரிவாக்கிக் கொண்டவர். எழுத்தாளராகவும், கவிஞராகவும் தன்னை இலக்கியவுலகில் அடையாளப் படுத்தி வருபவர்.

'எப்படிக் கற்போம்' (பாடல்), 'மழலை எழுச்சி' (பாடல்), 'சிந்தனைத்துளிகள்' (கட்டுரை), 'விழித்தெழுவோம்' (சிறுகதை), 'மலரின் கட்டுரைகள்' ஆகிய சிறுவர்க்கான நூல்களைத் தந்தவர். இதுவரை ஒலி நாடாக்களாகவும், இறுவட்டுக்களாகவும் ஐந்து புத்தாக்கங்களை வெளிக்கொணர்ந்தவர். இந்த வரிசையில் காலத்தின் தேவையுணர்ந்து அவரது 'சுற்றாடல் ஓர் அறிமுகம்' என்னும் ஒலிநாடா, இறுவட்டு ஆகியன தற்போது அவரால் வெளியிடப்பட்டுள்ளன. மாணவர்களும் ஆசிரியர்களும் அவற்றை வாங்கிப் பயன்பெற வேண்டும். அதன்மூலமாக ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வெளிக்காட்ட வேண்டும். அவை இவ்வாக்க கர்த்தாவின் அடுத்த முயற்சிகளை மேலும் மெருகூட்ட ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமெனலாம்.

**பண்டிதர்**
**செ.திருநாவுக்கரசு**

## காணவில்லை

(யாழ்ப்பாணம்)

குடும்பப் பெண்ணைக் காணவில்லையென யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏழாலை குப்பிளானைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான குமாரசாமி சறோஜாதேவி (வயது57) என்பவரே கடந்த மாதம் 28ஆம் திகதியில் இருந்து காணாமற் போயுள்ளதாக நேற்று முன்தினம் அவரது கணவர்யாழ்.மனிதஉரிமைஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். (அ-133,16)

## ஆசிரிய ஆலோசகர்களுக்கான கருத்தரங்கு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயத்துக்குட்பட்ட ஆசிரிய ஆலோசகர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 9ஆம் திகதி புதன் கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட ஆசிரிய ஆலோசகர்களை தவறாது கலந்துகொள்ளும்படி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ-29)

## இலவச மருத்துவ முகாம்

(சாவகச்சேரி)

மந்துவில் ஸ்ரீ பாரதி பாடசாலையில் எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை இலவச மருத்துவ முகாமும், பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப் (காலம்பிந்திய) பதிவுகள் மேற்கொள்ளப்படும் என்று சாவகச்சேரி லயன் கழகத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்தார். (அ-29)

## ஆடிப் பூரணை விழா

யாழ்ப்பாணம், தாவடி, கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரம ஆடிப் பூரணை விழா எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்கு மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் மேற்படி வித்தியாசாலை அதிபர் சி.சிவமலர் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் திருவிளக்கு பூஜையின் மகிமை என்னும் ஆன்மீக உரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் நிகழ்த்துவார்.

இதனைத் தொடர்ந்து ராமகிருஷ்ண அறநெறிப் பாடசாலை மாணவர்களது 'யாருக்கு யார் சொந்தம்' என்ற நாடகமும் ராமகிருஷ்ண மிஷன் வெளியீடான 'சிலையும் நானே சிற்பியும் நானே' வீடியோ படக் காட்சியும் 'எழுந்திரு விழித்துக் கொள்' என்ற சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை வரலாறு தொடர்பான கண்காட்சியும் இடம் பெறும். (து-2)

# பாரமி குலதுங்க கொலையில் பொலிஸ் அதிகாரி தொடர்பு?

(கொழும்பு)

குருநாகலில்தற்கொலை செய்துகொண்ட பொலிஸ் ஆய்வாளர் முதித் நிசாந்தவுக்கு இலங்கையின் மூன்றாம் நிலை இராணுவத் தளபதி பாரமி குலதுங்க கொலையில் தொடர்பிருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது:

கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையத்தின் சிறப்பு நடவடிக்கைப் பிரிவின் தலைமை ஆய்வாளராக இருந்தவர் முதித் நிசாந்த. அவரிடம் பாரமி குலதுங்க கொலை தொடர்பாக கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் இயக்குநர் சரத் லூகொட விசாரணை நடத்தியுள்ளார்.

முதித் நிசாந்தவை விசாரணைக்கு அழைத்த போது அவர் ஒத்துழைக்கவில்லை. அதனால் அவரை தலைமையத்துக்கு வருமாறு அழைத்தோம் என்று சரத் லூகோட தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 3ஆம் திகதி வியாழக்கிழமை குருநாகலில் உள்ள விருந்தினர் இல்லத்தில் முதித் நிசாந்த துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இதனால் பாரமி குலதுங்க கொலையில் அவருக்குத் தொடர்பிருக்கக்கூடும் என்று பொலிஸ் அதிகாரிகள் கருதுகின்றனர். (து)

# ஆங்கில மொழியறிவின் அவசியம்

'விஞ்ஞான மயமாகிக் கொண்டுவரும் இவ்வுலகில் ஆங்கில அறிவு இன்றியமையாதது. அதனை இலவசமாக வழங்குவதற்கு இந்த நூலக அபிவிருத்திக் குழுவினரும் நூலகர் கி.தர்மலிங்கமும் எடுத்த முயற்சிகளைப் பாராட்டுகிறேன்' என சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

சரசாலை பொதுநூலகத்தில் இலவச ஆங்கில வகுப்பை வைபவரீதியாக ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தென்மராட்சி சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெ.செல்வராணி மற்றும் ஆசிரியர் தர்மலிங்கம், நூலகர் சி.தர்மலிங்கம் உட்பட பலர் ஆங்கிலத்தின் அவசியம் பற்றி மாணவர்களுக்கு எடுத்தியம்பினர். (து-29)

## சிறந்த பண்ணையாளர் தெரிவு

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் ஆடு, மாடு,கோழி பண்ணை வளர்ப்பாளர்களிடையே சிறந்த பண்ணையாளர்களை தெரிவு செய்யும் போட்டி விரைவில் நடைபெறவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் பண்ணையாளர்கள் சாவகச்சேரி கால்நடை வைத்திய அலுவலகத்துடன் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (அ-29)

# அரசாங்கத்தில் இணைவது குறித்து ஓகஸ்ட் 10 இல் ஜே.வி.பி. அறிவிப்பு

மஹிந்தவின் அரசாங்கத்தில் இணைவது குறித்து எதிர்வரும் வியாழக்கிழமை ஜே.வி.பி அறிவிக்க உள்ளதாகத் தெரிகிறது.

அரசாங்கத்தில் இணைவதற்காக ஜே.வி.பி நிபந்தனைகளை விதித்துள்ளது. அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கான குறைந்தபட்ச பொதுச் செயல்திட்டம் ஒன்றை உருவாக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் நோர்வேயை வெளியேற்ற வேண்டும் என்பது உள்ளிட்ட ஜே.வி.பியின் சில நிபந்தனைகள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

மஹிந்தவின் தலைமையில் நடைபெற்ற அக்கூட்டத்தில் மங்கள சமரவீர, நிமல்சிறிபால டி சில்வா உள்ளிட்ட பலரும் ஜே.வி.பியின் நிபந்தனைகளை ஏற்பதால் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்தானது என்றும், அது விடுதலைப் புலிகளுக்கே சாதகமாக இருக்கும் என்றும் கூறியுள்ளனர்.

இதனையடுத்து கடந்த வியாழக்கிழமை ஜே.வி.பியுடன் சுதந்திரக் கட்சியின் குழு ஆலோசனை நடத்தியது.

சுதந்திரக் கட்சியின் சார்பில் மைத்திரிபால சிறிசேன, மங்கள சமரவீர, நிமல் சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜயந்த, அனுர பிரியதர்ஷன யாப்பா, டலஸ் அழகப்பெருமாள் ஆகியோரும் ஜே.வி.பி சார்பில்ரில்வின் சில்வா, அனுரகுமார திசநாயக்க, லால்காந்த ஆகியோரும் இச்சந்திப்பில் பங்கேற்றனர்.

சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டை நிமல் சிறிபால டி சில்வா விளக்கினார். சுதந்திரக் கட்சியின் இந்தக் கருத்துக்கள் குறித்து ஜே.வி.பி விவாதித்த பின்னர் கொழும்பில் ஓகஸ்ட் 10ஆம் திகதி பேரணியை நடத்தி அதில் அரசாங்கத்தில் இணையும் முடிவு அறிவிக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது. (து)

# முன்பள்ளி விளையாட்டு விழா

(சாவகச்சேரி)


சாவகச்சேரி நகரசபை நிர்வாகத்தின் கீழ் உள்ள தென்மட்டுவில் கலைமகள் முன்பள்ளியின் இவ் வாண்டுக்கான விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளி பி.ப 1.30 மணிக்கு மேற்படி முன்பள்ளி மைதானத்தில் இளைப்பாறிய அதிபர் க.துரைரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ், சிறப்பு விருந்தினர்களாக நகரசபை செயலர் திருமதி கு.ஆறுமுகம் மற்றும் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.பாக்கியராஜா ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக கிராம அலுவலர்கள் வை.துரைசிங்கம் மற்றும் க.வாமதேவன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-29)

# கர்மவீரர் காமராஜர்

முருக-தனுஷ்கோடி

## மீள்பார்வை 47



### நேருஜி ராஜினாமா - காமராஜ் எதிர்ப்பு

நேருஜியும் தமது ராஜினாமா கடிதத்தைத் தர முன் வந்தார். நானும் ராஜினாமா செய்கிறேன் என நேருஜி காரியக் கமிட்டியில் அறிவித்தார். உடனே காமராஜ் உட்பட எல்லோரும் இதை எதிர்த்தனர்.

நேருஜி எந்தக் காரணத்தைக் கொண்டும் ராஜினாமா செய்யக்கூடாது. நேருஜி விலகினால் இந்திய நேருஜி ராஜினாமா செய்தால் என் திட்டத்தையே நான் கைவிட்டு விடுகிறேன் என்று காமராஜ் காரியக் கமிட்டியில் வேகமாகப் பேசினார். காமராஜ் கூறியதைக் காரியக்கமிட்டி உறுப்பினர்கள் கைதட்டி வரவேற்றனர்.

தேசிய நலனைக் கருதி நேருஜியின் ராஜினாமாவைக் காரியக் கமிட்டி ஏற்கவில்லை. காமராஜ் திட்டத்துக்குக் கட்டுப்பட்டு நேருஜியே ராஜினாமா செய்யப்போவதாக அறிவித்தது. காரியக்கமிட்டியின் அதிகாரத்தை நிலை நாட்டப் பெரிதும் துணையாக இருந்தது.

தாம் மட்டும் பதவியில் இருந்து கொண்டு தமது நீண்ட நாளைய அருமை நண்பர்களின் ராஜினாமாக்களைப் பொறுக்கி எடுக்கும் இக்கட்டான வேலை தமக்கு மிகவும் வருத்தத்தை உண்டாக்குகிறது என்றும் அதனால் இந்த நாட்டையும் மக்களையும் காங்கிரஸ் கட்சியையும் எதிர் நோக்கியுள்ள மாபெரும் பொறுப்புக்களை உத்தேசித்து நிர்வாக எந்திரமும் கெட்டுப்போகாமல் கட்சியின் தீர்மானமும் வெற்றியடையும் வகையில் முதலில் 42 பேர்களின் ராஜினாமாவை ஏற்றிருப்பதாகவும் ஆகட்ஸ்டு 12 ஆம் திகதி இரவு கூடிய காரியக் கமிட்டியில் நேருஜி அறிவித்தார்.

நேருஜி அறிவித்த அந்தப் பட்டியலில் காமராஜ் (தமிழ்நாடு) பி.பட்நாயக் (ஒரிசா), பக்ஷிகுலாம் முகமது, (காஷ்மீர்), சி.பி குப்தா (உத்தரப்பிரதேசம்), பினோதானந்தா (பீகார்), பி.ஏ. மண்ட்லாய் (மத்தியப்பிரதேசம்) ஆகிய முதல் மந்திரிகளின் பெயர்களும் மத்திய மந்திரிகள் மொரார்ஜி தேசாய், லால்பகதூர் சாஸ்திரி, எஸ்.கே. பாட்டீல், ஜெகஜீவன்ராம், பி.கோபால் ரெட்டி, கே.எல். இவர்களைத் தவிர இன்னும் பல மத்திய மாநில மந்திரிகளின் பதவித் துறப்பும் ஏற்கப்படும் என்று நேருஜி அறிவித்தார்.

உலகத்திலேயே முதன் முதலாக அதிகாரத்தில் உள்ள மந்திரிகள் தாங்களாகவே முன்வந்து பதவி துறந்த இந்த நிகழ்ச்சி உலகையே வியப்பில் ஆழ்த்தியது. அவர்கள் கண் முன்னால் காமராஜ் தெரிந்தார். கே. பிளான் என்று இது அழைக்கப்பட்டது.

### *காந்தி சொன்னார் - காமராஜும் சொன்னார்*

காங்கிராஸ்காரர்கள் எல்லோரும் சர்க்காரையும் பதவியையுமே சுற்றிவர ஆரம்பித்துவிட்டனர். அவர்கள் கவனத்தை வேறு பக்கம் திருப்பியாக வேளண்டும். அதற்கு என்னைப் போன்றவர்கள் பதவியில் இருந்து விலகி வெளியில் வந்தால்தான் சர்க்காரிலும் பதவியிலும் உள்ள கவர்ச்சி குறையும் என்று தமது திட்டத்தின் கீழ் ராஜினாமா செய்வதற்கு முன் காமராஜ் கூறினார்.

காமராஜ் இவ்வாறு சொல்லி காந்தியடிகள் பிறந்த அக்டோபர் 2ஆம் திகதி தமது தியாகத் திட்டப்படி முதல் மந்திரி பதவியை ராஜினாமா செய்தார்.

அப்போது என் நெஞ்சம் பதவியிலும் அந்தஸ்திலும் இருக்கும்வரை சோஷலிசம் நம்மிடமிருந்து விலகிப் போய்க்கொண்டே தானிருக்கும் என்று காந்திஜி சொன்னதை நினைத்தது. காந்திஜி காட்டிய வழியில் காமராஜ் என்று நான் அன்று பெருமிதம் அடைந்தேன்.

எல்லா மட்டத்திலும் சேவா உணர்ச்சியை மீண்டும் தலைதூக்கிச் செய்து அதன் தார்மீக சக்தியை மேலும் பலப்படுத்துவது காமராஜ் திட்டத்தின் ஒரு முக்கிய குறிக்கோள். காமராஜ் திட்டத்தின் பிரதான நோக்கங்களில் ஒன்று மத்திய தலைமைப்பீடத்தின் அதிகாரத்தை சந்தேகத்திற்கிடமின்றி நிலை நாட்டுவதன் மூலம் காங்கிரஸில் ஐக்கியத்தையும் கட்டுப்பாட்டையும் நிலை நிறுத்துவதாகும்.

இந்த இரண்டும் காமராஜ் திட்டத்தால் நிறைவேறின.

எவ்வளவு உயர்ந்த பதவியை வகித்து வந்த போதிலும் சரி எதிர்காலத்தில் காங்கிரஸ் மேலிடத்தின் ஆணைக்குட்பட்டே செயலாற்ற வேண்டும் என்ற உண்மையைக் காமராஜ் திட்டத்தின் கீழ்ச் சமர்பிக்கப்பட்ட ராஜினாமாக்கள் தெளிவாகக் காட்டின.

## அகில இந்திய காங்கிரஸ் தலைவர்

1963 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3,4 ஆகிய திகதிகளில் அப்போதைய அகில இந்திய காங்கிரஸ் தலைவர் டி.சஞ்சீவய்யா தலைமையில் ஜெய்ப்பூர் காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் நடந்தது. அந்த மகாசபைக் கூட்டத்தில் காமராஜ் திட்டமும் அது செயல்படுத்தப்படும் விதமும் விளைவுகளும் என்பது பற்றி 6 மணி நேரம் விவாதம் நடந்தது.

காமராஜ் திட்டம் பல அதிசயிக்கத்தக்க நற்பலன்களை விளைவித்திருக்கிறது. பொது மக்களிடையேயும் காங்கிரஸ் ஊழியர்களிடையேயும் புது உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. நமது கட்சியில் காமராஜ் திட்டம் புத்துணர்ச்சியையும் புது வேகத்தையும் உண்டாக்கியுள்ளது என்பதில் ஐயமில்லை. இவ்வாறு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு நேருஜி உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார்.

இந்த நாட்டின் வரலாற்றிலும் காங்கிரஸின் வரலாற்றிலும் காமராஜ் திட்டம் ஒரு புதிய புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் பதவிக்கு மிகவும் தகுதி வாய்ந்த தலைவர் நம்முடைய காமராஜ்தான் என்று அப்போது நேருஜி குறிப்பிட்டார். உடனே எல்லோரும் கரகோஷம் செய்து அதை வரவேற்றனர்.

முன்னதாக அக்டோபர் மாதம் 9ஆம் திகதி காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் டெல்லியில் நடந்தது. அகில இந்திய காங்கிரஸுக்குப் புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பது பற்றி விவாதிக்கவே இந்தக் கூட்டம் நடந்தது. காமராஜ், லால்பகதூர் சாஸ்திரி, அதுல்யா கோஷ் ஆகியோர் பெயர்கள் புதிய தலைவர் பதவிக்கு இக்கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டன. நேருஜி காமராஜையே விரும்பினார். உடனே காங்கிரஸ் காரியக் கமிட்டி காமராஜை அகில இந்திய காங்கிரஸ் தலைவராக ஏகமனதாகத் தீர்மானித்தது.

ஜுலை மாதம் (1963) நேருஜியைக் காமராஜ் சந்தித்து காமராஜ் திட்டம் பற்றிக் கூறினார் அல்லவா? அப்போதே நேருஜி தமது விருப்பம் ஒன்றைக் காமராஜிடம் தெரிவித்தார். அகில இந்திய காங்கிரஸின் அடுத்த தலைவராக காமராஜ்தான் வர வேண்டும் என்பதே அது. தமிழ்நாட்டில் கட்சி வேலை பார்க்கவே முதல் மந்திரி பதவியை ராஜினாமா செய்கிறேன். ஆகவே அகில இந்திய காங்கிரஸ் தலைவராக நான் விரும்பவில்லை என்று நேருஜியிடம் அப்போது காமராஜ் கூறினார். அதற்குப் பிறகு காமராஜிடம் நேருஜி அதிகமாக வற்புறுத்தவில்லை. (தொடரும்)




கந்தரோடை வீரகத்தி விநாயகர் ஆலய

அலங்கார உற்சவம்

ஒன்பதாம் திருவிழா 07.08.2006

விக்கினங்கள் தீர்ப்பான்

விக்கினந் தீர்ப்பவன் வினையறுத் தோட்டுவான்
சிக்கெனப் பற்றிடின் சிக்கலைப் போக்குவான்
முக்குல வேந்தரும் முனிவருந் தொழுதநற்
பக்குவ விநாயகன் பதமலர் தொழுவோமே!

எஸ்.ஸ்ரீகுமரன்


## சிறுவர் கழகங்களை அமைக்கும் திட்டத்தில் முரண்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறுவர் கழகங்களை அமைக்கும் திட்டத்தில் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்போது கூடிய அக்கறையும் ஆர்வமும் காட்டி வருகின்றன.

கிராம சேவையாளர் பிரிவுகளில் சிறுவர் கழகங்களை அமைப்பதன் மூலம் சிறுவர்களுக்கான கட்டமைப்புக்களையும், திறன் விருத்திச் செயற்பாடுகளையும் ஊக்குவிப்பதாகக் கூறிக்கொள்கின்ற இத்தகைய நிறுவனங்களில் இது கிராமிய மட்ட சிறுவர்கள் மற்றும் பெற்றோர் மத்தியில் பல்வேறு கருத்து முரண்பாடுகளை ஏற்படுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

இதனால் சிறுவர்கள் மத்தியில் முரண்பாடுகளும் தாழ்வுச் சிக்கல்களும் தோன்றி வருகின்றன என அறியப்படுகின்றது. சிறுவர் கழகங்களை அமைப்பதில் ஆர்வம் காட்டிக் கொள்கின்ற அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு கழகங்கள் குறித்த தொலைநோக்குப் பார்வை தெளிவாக இல்லை என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை, அரசசார்பற்ற நிறுவனங்கள் தாமும் சிறுவர்களுடன் வேலை செய்கின்றன எனக் காட்டிக் கொள்வதற்காகவே சிறுவர் கழகங்களை அமைத்துள்ளன என்றும் கூறப்படுகிறது. அத்துடன் இவ்வாறு அமைக்கப்படும் சிறுவர் கழகங்களுக்குச் சரியான கோட்பாட்டு விதிகள் எதுவுமே இல்லாதிருப்பதாகவும் அறியப்படுகின்றது.

மேலும் தென்மராட்சி பிரதேசத்தில் மட்டும் அரசசார்பற்ற நிறுவனங்களால் மொத்தமாக 55 சிறுவர் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் இத் திட்டத்தின் கீழ் ஆரம்பம் முதலே இரட்டிப்புத் தன்மை வேலைகள் தோன்றியுள்ளன.

அத்துடன் ஒரு சில நிறுவனங்கள் செயல் திட்டக் கிராமங்களுக்கு ஒழுங்காகச் செல்லாமல் தாம் விரும்பிய காலங்களில் மட்டும் சென்று சிறுவர்கள் மத்தியில் குழப்ப எண்ண உணர்வுகளை உருவாக்கி வருகின்றன என்றும் கூறப்படுகிறது. (து-16)

## தொழிற் பயிற்சி நெறிபற்றிய விழிப்புணர்வுச் செயற்பாடு

(யாழ்பாணம்)

கனேடிய உலக பல்கலைக் கழக சேவை நிறுவனம் (ஆஸ்க்) நல்லூர் ஆலய உற்சவகாலத்தில் தொழிற் பயிற்சிநெறிகள் பற்றிய விழிப்புணர்வுச் செயற்பாடுகளை ஆலயச் சுற்றாடலில் நடாத்தவுள்ளது.

இதன் மூலம் ஆஸ்க் நிறுவனத்தின் தொழிற் பயிற்சி நெறிகள் பற்றிய விபரங்களும் தகவல்களும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் என ஆஸ்க் நிறுவனத்தின் யாழ். மாவட்ட திட்ட அதிகாரி ரீ.ஏ.எஸ். விமலன் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 9ஆம் திகதி வரை நடாத்தப்படும் விழிப்புணர்வுச் செயற்பாட்டில் ஆஸ்க் நிறுவனத்துடன் இணைந்து தொழிற்பயிற்சிகளை நடாத்திவரும் அறவழிப் போராட்டக் குழு, ஊற்று, சர்வோதயம், தேசிய இளைஞர் சேவை மன்றம் மற்றும் கைத்தொழில் திணைக்களம் ஆகியவை பங்குபற்றுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-16)

## சர்வதேச கண்காணிப்பாளர்களை நிறுத்தவேண்டும் அமெரிக்க மனித உரிமைகள் குழு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மேலதிக சர்வதேச கண்காணிப்பாளர்கள் நிலை நிறுத்தப்படுவது அவசியம் என்று அமெரிக்காவிலுள்ள மனித உரிமைகள் குழுவொன்று தெரிவித்துள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலிருந்து டென்மார்க், பின்லாந்து, சுவீடன் ஆகிய மூன்று நாடுகளும் விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளதையடுத்து இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வன்முறைகள் அதிகரித்துச்செல்லும் இவ்வேளையில், சர்வதேச கண்காணிப்பாளர்கள் பெருமளவில் நிலைநிறுத்தப்பட வேண்டுமென்று அமெரிக்காவிலுள்ள மனிதவுரிமைகள் குழுவின் ஆசியாவிற்கான பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மோதல்கள் அதிகரித்துள்ள நிலையில் இலங்கையிலுள்ள ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

டென்மார்க், பின்லாந்து, சுவீடன் ஆகிய மூன்று நாடுகளும் தமது பிரதிநிதிகளை கண்காணிப்புக்குழுவிலிருந்து விலக்கிக்கொள்வதானது இலங்கை மக்களின் பாதுகாப்பிற்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

எனவே இலங்கை மீது அக்கறை கொண்டுள்ள அரசாங்கங்கள் சர்வதேச கண்காணிப்பாளர்களை மேலதிகமாக அனுப்பிவைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் வடக்கு-கிழக்கு கொழும்பு உட்பட அரசியல் வன்முறைகள் அதிகரித்துள்ள பகுதிகளில் கண்காணிப்பாளர்களை நிலை நிறுத்தும் பொருட்டு பெருமளவிலான கண்காணிப்புக் குழுவொன்றை உருவாக்க வேண்டுமென்று அமெரிக்காவிலுள்ள மனிதவுரிமைகள்குழு தெரிவித்துள்ளது. (அ-9)

## மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

மாகாணக் கல்வியமைச்சால் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றி இதுவரை யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் கிடைக்க வில் லை. ஏனைய மாவட்டங்களில் தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சையைத் திரும்பவும் நடத்தி நியமனம் வழங்க கல்வி அமைச்சர் உறுதிமொழி தரும் வரை இன்று (திங்கட்கிழமை) தொடக்கம் மறியல் போராட்டம் தொடரும் என யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (து)

# 7 மணி நேரத்தில் 250 முறை தாக்குதல் லெபனானில் இஸ்ரேல் அட்டூழியம்



லெபனான் தலைநகர் பேரூத் மற்றும் துறைமுக நகரான டயர் ஆகியவற்றின் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் கடந்த சனிக்கிழமை 7 மணி நேரத்தில் 250 முறை கடுமையான தாக்குதல் நடத்தின. 4ஆயிரம் குண்டுகள் சரமாரியாக வீசப்பட்டன.

இதுவரை இல்லாத அளவுக்கு இந்தத் தாக்குதல் நடைபெற்றது. லெபனானின் எல்லையோரமுள்ள அய்தருன் கிராமத்தின் மீது 2 ஆயிரம் குண்டுகளை இஸ்ரேல் போர் விமானங்கள் வீசின. இதில் 14 பேர் காயமடைந்தனர். தாக்குதலுக்கு அஞ்சி கிராம மக்களில் பெரும்பாலானோர் இருப்பிடங்களை விட்டு வெளியேறிவிட்டதால் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

எல்லைப் பகுதியிலுள்ள 15 லெபனான் கிராமங்களை முற்றிலும் நாசப்படுத்த இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் அங்குள்ள ஹிஸ்புல்லா தீவிரவாதிகளின் மறைவிடங்களை ஒழித்துக்கட்ட முடியுமென இஸ்ரேல் கருதுகிறது.

தெற்கு லெபனானில் இஸ்ரேல் இராணுவத்தினர் தொடர்ந்து முன்னேறி வருகிறார்கள். விமானத் தாக்குதலில் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் மூவர் கொல்லப்பட்டனர் என்று இஸ்ரேல் இராணுவ அதிகாரி உதி ஆடம் தெரிவித்துள்ளார்.

லெபனானின் 8 கி.மீ பகுதிகள் இஸ்ரேல் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதாகவும் அவர் தெரிவித்தார். (து)




வெனிசுலா நாட்டின் சுதந்திர தின விழா அணிவகுப்பின் போது சீறிப்பாய்ந்த ரஷ்ய தயாரிப்பு போர் விமானம்.

# சர்வதேச விண்வெளி ஆய்வு மையம் விண்ணில் வைத்து பழுதுபார்ப்பு

சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் தங்கியுள்ள இரண்டு விண்வெளி வீரர்கள் விண்ணில் 6 மணி நேரம் நடந்து ஆய்வு மையத்தின் பழுதுகளை சரி பார்த்தனர். அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் விண்ணில் சர்வதேச ஆய்வு மையத்தை கட்டி வருகின்றன. ரூ.4.5 இலட்சம் கோடி செலவில் இந்த ஆய்வு மையம் உருவாகி வருகிறது.

பூமியின் சுற்று வட்டப் பாதையில் நிலை



டிஸ்கவரி விண்கலத்தை தொடர்ந்து விண்ணிற்கு அமெரிக்கா அனுப்ப இருக்கும் அட்லாண்டிஸ் விண்கலம். ஏவுதளத்தில் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

நிறுத்தப்பட்டுள்ள இந்த ஆய்வு மையம் பூமியில் இருந்து 360 கிலோ மீற்றர் உயரத்தில் உள்ளது. சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்குத் தேவையான பொருட்கள் மற்றும் விண்வெளி வீரர்களைக் கொண்டு செல்லும் பணியில் அமெரிக்க விண்கலங்கள் ஈடுபடுத்தப்பட்டன. தற்போது சர்வதேச விண்வெளி மையம் பாதி கட்டப்பட்டுள்ளது.

கடந்த 2003ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்கு கொலம்பியா என்ற அமெரிக்க விண்கலம் அனுப்பப்பட்டது. பூமிக்குத் திரும்பி வரும்போது அந்த விண்கலம் வெடித்து சிதறியதில் இந்திய வீராங்கனை கல்பனா சாவ்லா உள்ளிட்ட ஏழு விண்வெளி வீரர்கள் உயிரிழந்தனர். இந்த விபத்துக்குப் பிறகு அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாஸாவின் திட்டங்கள் முடங்கிப்போயின.

விண்கலங்களை செலுத்துவதில் ரஷ்யா உள்ளிட்ட சில நாடுகளும் நிபுணத்துவம் பெற்றுள்ளன. இருப்பினும் அமெரிக்க விண்கலம் மூலமே ஏராளமான பொருட்களைக் கொண்டு செல்ல முடியும் என்ற சூழ்நிலை உள்ளது.

எனவே சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்கு மீண்டும் விண்கலத்தை அனுப்பும் பணியில் நாசா ஈடுபட்டது. கொலம்பியா விண்கல விபத்துக்குப் பிறகு அனுப்பப்பட்ட டிஸ்கவரி விண்கலமும் சில சிக்கல்களை சந்திக்க நேரிட்டது. இதையடுத்து விண்கல பாதுகாப்புக்காக பல ஆயிரம் கோடி ரூபாய் செலவில் நடவடிக்கைகள் அனுப்பப்பட்டன. கடந்த மாதம் டிஸ்கவரி விண்கலம் மீண்டும் விண்ணில் செலுத்தப்பட்டு பத்திரமாக பூமிக்குத் திரும்பியது. இதையடுத்தே நாசா தனது அடுத்தகட்ட நடவடிக்கையில் நம்பிக்கையாக இறங்கியுள்ளது.

சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் நாசாவை சேர்ந்த ஜெப்ரி வில்லியம்ஸ் மற்றும் ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையத்தைச் சேர்ந்த தாமஸ் ரியட்டர் ஆகியோர் தங்கியுள்ளனர். இவர்கள் கடந்த 3ஆம் திகதி இலங்கை நேரப்படி இரவு 7.30 மணிக்கு விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து வெளியே வந்தனர். அப்போது இந்த சர்வதேச விண்வெளி ஆய்வுமையம் அவுஸ்திரேலியா மற்றும் தென்கிழக்கு ஆசிய பகுதிகளுக்கு மேலே இருந்தது.

அவர்கள் ஆறு மணி நேரம் விண்ணில் நடந்து ஆய்வு மையத்தில் இருந்த பழுதுகளை சரிபார்த்தனர். ஆய்வு மையத்தைக் குளிரூட்டும் முக்கிய சாதனத்தில் ஒரு பொருள் உடைந்து இருந்தது. உடைந்த பொருளுக்குப் பதிலாக புதிய பொருளை அவர்கள் பொருத்தினர். மேலும் ஆய்வு மையத்தின் மேற்பரப்பின் வெப்ப பகுதியில் ஏற்படும் பழுதுகளை கண்டுபிடிக்கும் புறசிவப்பு கமரா சரியாக செயல்படுகிறதா என விண்வெளி வீரர்கள் பார்த்தனர்.

சர்வதேச ஆய்வு மையத்தைச் சுற்றி மின்சாரம் காணப்படுகிறது. இந்த மின்சாரத்தின் அளவைக் கண்டுபிடிக்கும் ஒரு கருவி உட்பட இரண்டு கருவிகளை விண்வெளி ஆய்வு மையத்தின் மேற்பரப்பில் பொருத்தி விட்டு வந்தனர்.

அமெரிக்காவின் நாசா நிறுவனம் வரும் 27ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 7ஆம் திகதிக்குள் அட்லாண்டிஸ் என்ற விண்கலத்தை விண்ணில் செலுத்தவுள்ளது. இந்த விண்கலம் சர்வதேச விண்வெளி ஆய்வுமையத்துக்குத் தேவையான பொருட்களை எடுத்துச் செல்லும். (அ)

# அமெரிக்க சீக்கியர்களுக்கு வெற்றி குருத்வாரா அமைக்க நீதிமன்றம் அனுமதி

(ஹூஸ்டன்)

கலிபோர்னியாவில் குருத்வாரா கட்டுவதற்கு சீக்கிய மதத்தினருக்கு அமெரிக்க கோர்ட் அனுமதி அளித்துள்ளது.

கலிபோர்னியா மாகாணம் யுபா நகரில் குருத்வாராவை கட்ட அங்கு உள்ள சீக்கிய அமைப்புகள் திட்டமிட்டன. இதற்கு அப்பகுதியில் வசிப்பவர்கள், ‘இது குடியிருப்பு பகுதி. இங்கு குருத்வாரா அமைக்கக் கூடாது’ என எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதையடுத்து ஷட்டர் கவுண்டி என்ற இடத்தில் விவசாய நிலத்திற்காக ஒதுக்கப்பட்ட பகுதியில் குருத்வாரா அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கு ஷட்டர் கவுண்டி நிர்வாகம் குருத்வாரா அமையவுள்ள இடம் புறநகர்ப் பகுதியில் உள்ளது. வளர்ச்சிப் பணிகள் கருதி அங்கு குருத்வாரா அமைக்க அனுமதி அளிக்கமுடியாது என தெரிவித்தது.

இதனை எதிர்த்து சீக்கிய அமைப்புகளின் சார்பில் கோர்ட்டில் வழக்கு தொடுக்கப்பட்டது., மத சுதந்திரத்தை மீறும் வகையில் ஷட்டர் கவுண்டி வாரியத்தின் ஆணையாளர் குருத்வாரா அமைக்க அனுமதி மறுப்பதாக மனுவில் கூறப்பட்டிருந்தது.

இதனை விசாரித்த பெடரல் கோர்ட் மதச்சுதந்திரம் கருதி குருத்வாரா அமைக்க அனுமதி அளித்தது. இது அமெரிக்காவில் வாழும் சீக்கியர்களுக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதப்படுகிறது. (து)

உலக தரிசனம்



நம் நாட்டில் மனிதர்கள்தான் மாடு மேய்க்கிறார்கள். ஜேர்மனியில் நாய்களைப் பயன்படுத்துகிறார்கள். அமெரிக்கர்களோ ஹெலிகொப்டரைப் பயன்படுத்தி மாடு மேய்க்கிறார்கள்.



மும்பையில் தொடர் மழை பெய்து வருகிறது. அகோலா பகுதியில் பல வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. இதில் சிக்கி 7 பேர் இறந்தனர். பலர் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர்.

# நேபாள மன்னரின் நிலங்களை முடக்க அரசு நடவடிக்கை

(காத்மண்டு)

‘நேபாளத்தில் மன்னர் குடும்பத்துக்கு சொந்தமான நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்படும்’ என அந்நாட்டின் அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேபாளத்தில் மன்னர் ஞானேந்திராவை ஆட்சி அதிகாரத்தில் இருந்து இறக்கிய பின்னர் பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா தலைமையிலான இடைக்கால அரசு அமைந்தது. இந்த அரசு படிப்படியாக மன்னரின ஏகபோக அதிகாரங்களைப் பறித்து வருகிறது. மற்ற பொதுமக்களை போல மன்னரும் வரி செலுத்த வேண்டும் என அரசு கோரும் நிலை ஏற்படவுள்ளது. இந்த நிலையில் மன்னர் மற்றும் அவரின் குடும்பத்தாருக்கு சொந்தமாக உள்ள ஏராளமான நிலங்களின் மீது அரசு கண் வைத்துள்ளது.

நேபாளத்தில் மன்னரின் குடும்பத்துக்கு சொந்தமாக நான்காயிரத்து 250 ஏக்கருக்கு நிலம் உள்ளது என ஆரம்ப கட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. இதில் காத்மண்டுவில் உள்ள நாராயண்ஹிட்டி அரண்மனை மட்டும் ஒட்டுமொத்தமாக ஆயிரத்து 875 ஏக்கரில் பரந்து விரிந்துள்ளது. மேலும் ஏழு மாவட்டங்களில் பரவலாக கட்டடங்கள், மனைகள். விவசாய நிலங்கள் காடுகள் என ஏராளமான நிலங்கள் மன்னருக்கு உள்ளன. மன்னர்தவிர அவரின் குடும்பத்தாருக்கு அதிகளவில் சொத்துக்கள் உள்ளன.

தனி நபர்களாக மன்னருக்கும் அவரின் குடும்பத்தாருக்கும் இவ்வளவு சொத்துக்கள் உள்ள நிலையில் இதே நாட்டில் வாழும் பொதுமக்களில் 80 சதவீதமானோர் போதிய வசதிகள் இன்றி ஏழ்மையில் வாழ்கின்றனர். இதனால் மன்னர் குடும்பத்துக்கு சொந்தமாக உள்ள அபரிமிதமான நிலங்களை கைப்பற்றி ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்கும் முயற்சியில் நேபாள இடைக்கால அரசு ஈடுபட்டுள்ளது.

இதுகுறித்து நேபாள நிலச் சீர்திருத்த துறை அமைச்சர் பிரிபு நாராயண் சவுதாரி கூறுகையில், நேபாளத்தில் ஒரு நபருக்கு 17 ஏக்கர் வரை நிலம் வைத்துக் கொள்ளலாம். மன்னர் அல்லது அவரின் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு சொந்தமான நிலங்கள் குறித்து தகவல்கள் சேகரித்து வருகிறோம். அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமான சொத்து இருந்தால் அவை பறிமுதல் செய்யப்படும். பின்னர் அவை நிலமற்ற ஏழை மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும். மன்னரின் சொத்து விவரங்களை கணக்கெடுப்பது அவசியம். பறிமுதலுக்கு மட்டுமல்ல சொத்து வரி வசூலுக்காகவும் இது பயன்படும் என்றார். (து)

...ரிய செய்கைகளை செய்யாமல் இரு... ...சிய நினைவுகளையும் நினையாமல் இருக்க வேண்டும்.

-ஔரேலியன் மார்க்ஸ்

வலம்புரி

# விதண்டாவாத கருத்துக்கள் வேண்டாம்

மூதூரில் இடம் பெற்ற யுத்தம் முடிவுக்கு வந்தது. இ... ...வக் கட்டுப்பாட்டில் இருந்த மூதூரைக் கைப்பற்றிய விடுதலைப்புலிகள் மக்களின் நன்மையைக்கருதி அந்த இடத்தை விட்டு வெளியேறியுள்ளனர்.

...யமடைந்த பொதுமக்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல உதவுங்கள், இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது இடங்களில் குடியமர்த்துவதற்கு வாய்ப்பளியுங்கள் என்ற பொது அமைப்புக்களின் கோரிக்கைகள் மத்தியில் மூதூரைவிட்டு விடுதலைப்புலி உறுப்பினர்கள் வெளியேறியுள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத்தெரிவித்த விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன்,

...பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது இடங்களில் குடியமர முடியும் என்ற அறிவித்தலை மக்களுக்கு விடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார். அதேவேளை,

விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் மூதூர்த் தாக்குதல் பற்றி தெளிவுபடுத்தியுள்ளார்.

அதில் மூதூர் மீதான தாக்குதல் மட்டுப்படுத்தப்பட்டது என்றும் விடுதலைப்புலிகள் தமது இலக்கை அடைந்த பின்னர் மீளவும் தமது இருப்பு நிலைகளுக்குத்திரும்பி, யுத்தநிறுத்த உடன்படிக்கையை கடைப்பிடிப்பர் என்றும் கூறியுள்ளார்.

படைகளின் அழுத்தத்தை தணிக்கவே மூதூர்த் தாக்குதல் இடம் பெற்றதாகவும் இளந்திரை... கூறியிருப்பது இங்கு நோக்குதற்குரியது.

அதாவது, யுத்த நிறுத்த உடன்படிக்கையை கடைப்பிடிக்காது அரச படைகள் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டதன் காரணமாகவே மூதூர்த்தாக்குதலை மேற்கொள்ளவேண்டியிருந்... ...பது இளந்திரையனின் கருத்தாகும்.

எனவே இது விடயத்தை அ...ம். சமாதான அனுசரணைப் பணியில் ஈடுபட்டுள்ள நோர்வேயும் தமது கருத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

இராணுவ அழுத்தத்தை தணிப்பதற்காவே மூதூர்மீது தாக்குதல் நடத்தவேண்டியிருந்ததாக விடுதலைப்புலிகளின் இராணுவப்பேச்சாளர் இளந்திரையன் கூறியதில்,

விடுதலைப்புலிகளின் படைப்பலத்தை மீண்டும் ஒரு தடவை அரச படைகளுக்கும் பேரினவாதிகளுக்கும் அரசுக்கும் காட்டுவதும் தாக்குதலின் நோக்கு என்பது உணரப்படவேண்டியதாகும்.

எனவே இனிமேலும் இத்தகைய தாக்குதல்கள் இடம் பெறாது பார்த்துக்கொள்ளும் பெரும் பொறுப்பு அரசிடமும் படைத்தரப்பிடமுமே உண்டு.

இதற்கு என்னதான் செய்யவேண்டுமென அவர்கள் கேட்பார்களாயின், நாவைக்காப்பாற்றுங்கள்; யுத்தநிறுத்த உடன்படிக்கையைக் கடைப் பிடியுங்கள் என்பவற்றை மட்டுமே கூற முடியும்.

எனினும் அதனைச்செய்வதாக அரசின் நடவடிக்கைகள் இருக்கவில்லை. இதனை உறுதி செய்வதாகவே மூதூரை படையினர் கைப்பற்றி விட்டனர் என்ற படைத்தரப்பின் அறிவிப்பு அமைந்துள்ளது.

எப்படி இருக்கிறது நிலைமை? மூதூரை விட்டு விடுதலைப்புலிகள் வெளியேற, அதனை தாம் கைப்பற்றியதாக படைத்தரப்புக்கூறுவது மீண்டுமோர் தாக்குதலுக்கே வழி வகுக்கும்.

# 22 யுத்த டாங்கி கொள்வனவு மோசடி அம்பலம் ஜனாதிபதி உத்தரவால் கொள்வனவு இடை நிறுத்தம்

ஸ்ரீலங்கா இராணுவத்துக்காக பாகிஸ்தானில் இருந்து 1,100கோடி ரூபா பெறுமதி வாய்ந்த 22 சீனத் தயாரிப்பு யுத்த டாங்கிகளுக்கான கொள்வனவில் மோசடி நடந்துள்ளது அம்பலமானதையடுத்து கொள் வனவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இடைநிறுத் தியுள்ளார்.

தலா 15கோடி ரூபா பெறுமதியான இந்த யுத்த டாங்கிகளை பாகிஸ்தான் நிறுவனம் ஒன்று சீனாவிலிருந்து கொள்வனவு செய்து அதனை 50 கோடி ரூபாவிற்கு விற்பனை செய்வதற்கு இருந்ததை அறிந்த மஹிந்த இந் தக் கொள்வனவை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத் துள்ளார்.

சீனாவிலிருந்து நேரடியாக 15 கோடி ரூபாவிற்கு இவற்றைக் கொள்வனவு செய்ய முடியுமாக இருக்கையில் பாகிஸ்தான் ஊடாக கொள்வனவு செய்கையில் 35 கோடி ரூபாவை மேலதிகமாக செலுத்துவதன் ஊடாக இந்தக் கொள்வனவானது மோசடிமிக்க ஒன்று என தெரியவந் துள்ளது. 22 யுத்த டாங்கிகளுக்காக 1,100கோடி ரூபா செலவா வதுடன் சீனாவில் கொள்வனவு செய்வதைவிட 770 கோடி ரூபாவை மேலதிகமாக செலுத்தவேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஊழல் மோசடிகள் மிக்க கொடுக்கல் வாங்கல்க ளுக் காக கருதப்படும் இந்த யுத்த டாங்கிக் கொள்வனவு பற் றிய ஆரம்பகட்ட நடவடிக்கைகளுக்காகவும் பரிந் துரை களுக்கா கவும் பல முறை பகிஸ்தான் சென்றுள்ள அதிகா ரிகளின் இராணுவத்தின் பொறியியல் பிரிவிலோ தரைப் படையிலோ இல்லாத அதிகாரி ஒருவரும் இருந்துள்ளதாகத் தெரியவந் துள்ளது.

இந்தக் கொடுக்கல் வாங்கலில் சம்பந்தப்பட்டி ருக்கும் முக்கிய இராணுவ அதிகாரிகளின் தேவ்வகளுக்கு அமைய இவை இடம்பெற்றுள்ளதாக கூறப்படுவதுடன் இந்த யுத்த டாங்கிகளின் 42 தொன் அதிக எடையானது எமது நிலத்திற்கு ஏற்புடையதல்ல என்றும், இதுவும் குறை வான தரத்திலேயே உள்ளது எனவும் சுட்டிக்காட்டும் இரா ணுவ அதிகாரிகள் இதனை ஜனாதிபதி மஹிந்தவின் கவ னத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.

இந்த விடயங்கள் குறித்து கவனம் செலுத்திய ஜனாதி பதி இராணுவத்துக்கு அத்தியாவசியமாக தேவைப்படு மாயின் இப்போதைக்கு இரண்டு யுத்த டாங்கிகளை மட் டுமே கொள்வனவு செய்துவிட்டு ஏனைய 20 யுத்த டாங்கி களின் கொள்வனவை இடை நிறுத்துமாறும் தெரிவித்துள்ளார். (து)

## தீவக அரிமாக் கழகத்தின் மருத்துவசேவை

(யாழ்ப்பாணம்)

கடந்த சனிக்கிழமை தீவக அரிமாக்கழகம் நடாத்திய மருத்துவ முகாமில் 300ற்கும் மேற்பட்ட நோயாளர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்.

இவர்களுள் 180 பேர்களுக்கு நடத்தப்பட்ட சலப் பரி சோதனையில் 65 பேர் சலோரக நோய்க்கு ஆளாகி யிருப்பது இனங்காணப்பட்டது.

50 பேர்களுக்கு நடத்தப்பட்ட இரத்த பரிசோதனை யில் 45 பேரின் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு உட னடியாக அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற ஒழுங்குகள் செய்யப்பட்டன. 225 பேருக்கு கண்பரிசோதனை செய்யப்பட்டு அவர் களுள் 150 பேருக்கு வலயத் தலைவர் லயன் பி.ஆர். ரஞ் சனால் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

63 பேர் பொது மருத்துவ பரிசோதனை பெற்றனர். 32 பேர் சரும நோய் பரிசோதனைக்குள்ளாயினர். (து)

## திருமலை கல்லாறில் 30 தமிழர்கள் கைது

(கொழும்பு)

திருமலை கல்லாறு பகுதியில் இலங்கை இராணுவத் தால் மூதூரைச் சேர்ந்த முப்பது தமிழர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர் எனத் தெரிகிறது.

கடந்த சனிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு உன் கோர் நிறுவனத்தின் வழித்துணையுடன் நான்கு பேருந்து வண்டிக்ளில் சென்றுகொண்டிருந்த முந்நூறு வரையான தமிழர்களை கந்தளாய் கல்லாறு பகுதியில் வழி மறித்து இலங்கை இராணுவம் இவர் களில் முப்பது பேரை கைது செய்துள்ளனர் எனத் தெரிகிறது. (து)

## கிளைமோரிலிருந்து தப்ப இராணுவம் புதிய உத்தி

யாழ். குடாநாட்டில் இராணுவ வாகனத் தொடரணிகள் மீதான கிளைமோர் தாக்குதல்களிலிருந்து தப்பித்துக் கொள்ள புதிய புதிய இராணுவ உத்திகளை படைத்தரப்பு அமுல்படுத்தி வருகின்றது.

இதன் பிரகாரம் பிரதான வீதிகளில் இராணுவத்தினரை நிலைகொள்ள வைத்துள்ளமைக்கு மேலதிகமாக பிரதான வீதிகளின் இரு மருங்கிலும் சுமார் 50 அடி தூரத்திற்கு தொடர்ச்சியாக மேலும் படையினர் நிலை கொள்ள வைக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய புதிய உத்தியினாலேயே் கிளைமோர் தாக்குதல்களில் இருந்து குறைந்த சேதத்துடன் அண்மைய காலங்களில் தப்பித்துக்கொள்ள முடிந்ததாக யாழ். மாவட்ட படைத் தலைமை கருதுகின்றது. ஏற்கனவே வீதியோர வேலிகளை வெட்டியும் மரங்களின் கிளைகளைத் தறித்தும் தமது பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து)

## இராணுவத் தலைமையகத்தில் வெடிபொருட்கள்

(கொழும்பு)

இலங்கை இராணுவத் தலைமையகத்தில் உள்ள இராணுவத் தளபதியின் காரியாலயத்திற்குச் செல்லும் நுழைவாயில் அருகே பூச்சாடியொன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த சி-4 ரக வெடிபொருட்கள் அடங்கிய சிறிய பொதியொன்று கடந்த வெள்ளிக்கிழமை காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

50 கிராம் வெடி மருந்தினைக் கொண்ட இந்தப் பொதி இராணுவத் தளபதியின் உத்தியோகபூர்வ காரியாலயத்திற் குச் செல்லும் நுழைவாயில் அருகில் வாகனத் தரிப்பிடத்தில் உள்ள மலர்ச்சாடியில் வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள் ளது.

வெடிமருந்துகளைக் கண்டுபிடிப்பதற்கு பயிற்றப்பட்ட நாய்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே இந்த வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இராணுவத்தளபதி தனது காரியாலயத்திற்கு வரும்போது அவரின் வாகனம் இந்த இடத்திலேயே தரித்து நிற்கும். இந்த சம்பவத்தையடுத்து இராணுவத் தலைமையகப் பிரதேசம் முழுமையாக சோதனைக்குட்படுத்தப்பட்டது. (து)

## பலவீனமான நிலையில் யு.நி.க. குழு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் வற்புறுத்தல் காரணமாக ஐரோப்பிய யூனியன் நாடுகளைச் சேர்ந்த யுத்த நிறுத்த கணகாண்பபுக் குழுவின் உறுப்பினர்கள் நீக்கப்பட்டதால் இந்த நாட்டு மக்களின் பாதுகாப்பு அச்சத்திற்குள்ளாகியிருப்பதாக கியூமன்வொய்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச கண்காணிப்பாளர்களை தொடர்ந்தும் சமாதான நடவடிக்கையில் பங்கு கொள்ள வைத்து இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினை பலப்படுத்த வேண்டும் என்றும் அந் நிறுவனம் கேட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த நடவடிக்கை காரணமாக சர்வதேச மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு ஒன்றை நிறுவவேண்டிய அவசியம் உணரப்பட்டுள்ளது. இவ் வாறான ஒரு அமைப்பு மூலம் மக்கள் சிறந்த பயனை அடைய முடியுமென்று அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (து-9)

## அரசின் கையைப் பலப்படுத்துமாறு அரச ஊழியர்களுக்கு வேண்டுகோள்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களின் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை ஆயிரத்து100 ரூபாவால் அதிகரிப்பதற்கு ஜனாதிபதி எடுத்த தீர்மானத்தை தொழிற்சங்கங்கள் பாராட்டியுள்ளன.

நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் இடம்பெறும் வேளையில், ஜனாதிபதி மேற்கொண்ட இந்த நடவடிக்கை அரசாங்க மற்றும் ஓய்வூதியர்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்ட பெரும் உதவியாகுமென அரசாங்க சேவைகள் தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தொழிற்சங்க நடவடிக்கைகளின் ஊடகவோ அல்லது பேச்சுவார்த்தைகளின் ஊடாகவோ இத்தத் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தொழிலாளர்களின் வேண்டுகோளை செவிமடுக்கும் வ்கையில் இந்தக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் சம்மேளனத் தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

எனவே அரச ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடாமல் அரசாங்கத்தின் முன்னெடுப்பிற்கு உதவி வழங்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (து-9)

## யாழைத் தாக்க பூநகரியில் தயாராக இருந்த கடற்புலிகள்? சிங்கள நாளேடு வெளியிடும் தகவல்

(கொழும்பு)

மூதூரில் தாக்குதல் நடந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் தாக்குதல் நடத்துவதற்காக விடுதலைப் புலிகள் பூநகரியில் 40 கடற்புலிகளின் படகுகளை தயார் நிலையில் வைத்திருந்துள்ளனர் என்ற தகவல்கள் ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவிற்கு கிடைத்ததாக கொழும்பில் வெளியாகும் சிங்கள நாளேடொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பூநகரிப்பாதை மற்றும் புதிய முகாம்களை அமைத்து யாழ்ப்பாணத்தின் மீது தாக்குதல் நடத்துவதே விடுதலைப் புலிகளின் அடுத்த இலக்காக இருந்தது என தகவல்கள் வெளியாகியிருப்பதாக சிரேஷ்ட இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருப்பதாகவும் அந்த நாளேட்டின் செய்தி மேலும் தெரிவித்துள்ளது. (து)

### தினசரி தியானம்
### விவேகச் சிந்தனைகள்



விதி வழி மதி செல்லும் என்று பொதுவாகச் சொல்வது வழக்கம். இறைவன் அருளால் விதியையும் வெல்ல முடியும். மதியையும் வெல்ல முடியும்.

சுவாமி விவேகானந்தர்

## மாவிலாற்றைத்...

மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.எழிலன் பொதுமக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அப்பகுதிக்குச் சென்றனர்.

அணைக்கட்டு மதகுகளுக்கு அண்மையில் அக்குழுவினர் சென்றபோது இராணுவத்தினர் தொடர்ச்சியான ஆட்லறித்தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

படையினரின் இத் தாக்குதலில் அக்குழுவினர் சிறிய இடைவெளியில் உயிர் தப்பினர். இராணுவத்தின் நூறு வரையிலான ஆட்லறி எறிகணைகள் அப்பகுதியில் செறிவாக விழுந்து வெடித்தன என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

நோர்வேயின் சிறப்புத்தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயரிடம் தாக்குதலை நிறுத்துவதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உறுதியளித்திருந்த நிலையில் மீண்டும் நேற்று தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனவும் இதனால் மாவிலாற்றை திறப்பது குறித்து முடிவைப்பரிசீலிக்கவேண்டியுள்ளதாக திருகோணமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இராணுவம் தாக்குதலை தொடர்ந்துள்ளதால் தாமும் பதில்தாக்குதலை தொடரவேண்டியுள்ளதாக எழிலன் மேலும் கூறினார். (ச-5)

## நோர்வே,ஐஸ்லாந்து...

தென்பது குறித்து உள்ளூர் பிரதிநிதிகள் குழுவினருடன் நாங்கள் விவாதிக்கவுள்ளோம். ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக்குழுவினர் தொடர்பான நிலைப் பாட்டை பரிசீலனை செய்யுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

விடுதலைப்புலிகள் தமது நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளனர். மேலும் பாதுகாப்புக்காரணங்களுக்காக பின்லாந்து ,சுவீடன் மற்றும் டென்மார் நாடுகள் தங்களது கண்காணிப்புக்குழு உறுப்பினர்களை விலக்கிக் கொண்டது.

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் எமக்கு மீளவும் உறுதியளித்துள்ளனர். இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தொடர்ந்து இயங்கவேண்டுமென்பதில் உண்மையில் இருதரப்பும் விரும்புகிறது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் ஈடுபாட்டுடன் உள்ளனர். ஆகையால் செப்ரெம்பர் முதலாம் திகதியின் பின்னர் ஐஸ்லாந்து மற்றும் நோர்வே உறுப்பினர்கள் தொடர்ந்து செயற்படுவர்.

செப்ரெம்பர் 1 இற்குப் பிறகு கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை குறையும். மேலதிகமாக உறுப்பினர்களை கண்காணிப்புக்குழுவில் இணைப்பதற்கான சாத்தியங்களை ஆராய்கிறோம். அதற்கு சிறிது காலம் எடுக்கும் என்றார் பௌயர். (ச-5)

## மாவிலாற்றை...

இராணுவப்பேச்சாளர் உபாலி இராஜபக்ஷ கூறுகையில், நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலானது மாவிலாறு பிரதேசத்தில் உள்ள விடுதலைப்புலிகளின் நிலைகளை நிர்மூலமாக்கத்தான்.

கால்வாயில் நீர்போக வேண்டுமெனில் அது அரச படைகளால்தான் செய்யப்பட வேண்டும். விடுதலைப்புலிகள் அல்ல என்றார் உபாலி இராஜப்க்ஷ.

இந் நிலையில் மூதூர் கிழக்கில் சிங்கள இராணுவம் நேற்று மீண்டும் யுத்தத்தை தொடங்கியுள்ளது. திருகோணமலை தளத்தில் இருந்து நேற்று மாலை ஒரு மணி அளவில் பல்குழல் உந்து கணைச்செலுத்திகள் மூலம் உந்துகணைகள் வீசப்பட்டன.

ஆறு ஏறிகணை வீச்சுக்களும் மூன்று சுற்று உந்துகணைத்தாக்குதல்களும் மாலை ஐந்து மணிவரை நடத்தப்பட்டுள்ளன.

மேலும் மாவிலாறு மதகுகளைத்திறக்கச் சென்ற இலங்கை போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுத்தலைவர் உல்ஃப் ஹென்றிக்சன், திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.எழிலன் உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர் மீதும் எறிகணைத் தாக்குதலை சிங்கள இராணுவம் நடத்தியது. இதில் அனைவரும் உயிர்தப்பினர்.

இராணுவத்தின் தாக்குதல்கள் தொடருமானால் அதனை ஒரு மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையாக கருதாமல் யுத்தப்பிரகடனமாகக்கருதி பரந்தளவிலான தாக்குதல் நடத்தப்படுமென்று தமிழீழ விடு தலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் எச்சரித்திருந்த நிலைமையில் மீண்டும் அரசு யுத்தத்தை தொடங்கியுள்ளது. (ச-5)

# பிரச்சினையைத் தீர்ப்பதற்கு...

தமிழீழ அரசியல்துறை நடுவகப்பணியகத்தில் நோர்வே சிறப்புத்தூதுவரும் தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளருக்குமிடையில் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு இச் சந்திப்பு நடைபெற்றது.

இச் சந்திப்பின் பின் ஊடகவியலாளர்களுக்கு சு.ப.தமிழ்ச்செல்வன் அளித்த நேர்காணல் வருமாறு,

அரசாங்கத்தின் யுத்த வெறிப்போக்குத் தொடர்பாகவும் எமது மக்கள் மீதும் தேசத்தின் மீதும் அரசாங்கம் தொடுத்துள்ள யுத்த நடவடிக்கைகள் பற்றியும் நோர்வே சிறப்புத் தூதுவர் உள்ளடங்கிய தூதுக்குழுவிடம் நாம் விரிவாக விளக்கினோம்.

*யுத்த அபாயம்*

இராணுவம் எமது மக்கள் மீது விமானக் குண்டு வீச்சுக்களை, ஆட்லறி எறிகணை வீச்சுக்களை, யுத்த நகர்வுகளை தொடர்ந்தும் மேற்கொள்ள முயலுமானால் அது பரந்தளவிலான யுத்தமாக வெடிக்கும் நிலையையே ஏற்படுத்தும். அது யுத்தநிறுத்த உடன்படிக்கையை இல்லாமல் செய்யும் என்ற அபாயத்தையும் இச் சந்திப்பில் தெளிவாக்கியுள்ளோம்.

எமது மக்களின் வாழ்விடங்களை ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு எங்களுடைய மக்களை கேடயங்களாகப்பாவித்துக் கொண்டு யுத்தநடவடிக்கைகளை மேற்கொண்டுவருதென்பது மனிதாபிமானமற்ற மிகமோசமான யுத்தநிறுத்த மீறல் என்றும் கூறியுள்ளோம்.

எமது மக்களை ஆக்கிரமித்து கேடயங்களாக வைத்துக்கொண்டு இராணுவத்தாக்குதல்களை நடத்துதென்பது எமது மக்களுக்கு மிக மோசமான மனிதாபிமான அவலத்தையும் நெருக்கடியையும் பாரியளவிலான அழிவுகளையும் ஏற்படுத்தும் என்பதால் யுத்தநிறுத்த உடன்பாட்டு விதிகளின்படி உடனடியாக வாழ்விடங்களில் இருந்து இராணுவம் விலக்கிக்கொள்ளப்படவேண்டும்.

அதுவே இந்த போர்ச்சூழலைத்தவிர்த்து அமைதி முயற்சிகளையோ பேச்சுவார்த்தைக்கான சூழலையோ உருவாக்க உதவக் கூடும். சர்வ தேச சமூகமானது யுத்தத்தை நிறுத்த எவ்வளவு அக்கறை செலுத்துகிறதோ அதே அக் கறையானது எமது தேசத்தில் எமது மக்கள் வாழ்விடங்களில் இருந்து ஆக்கிரமிப்புப் படைகளை அகற்றுவதற்கான வலியுறுத்தலிலும் இருக்கவேண்டும் என்றும் நோர்வே குழுவிடம் கூறியுள்ளோம்.

*பேச்சுக்குழு அமைப்பு*

மாவிலாறு நீர்ப்பிரச்சினை தொடர்பாக எரிக்சொல்ஹெய்ம் அவர்களால் விடுக்கப்பட்டவேண்டுகோளை நேரடியாக நோர்வே சிறப்புத்தூதுவரும் வேண்டிக்கொண்டார்.

எங்கள் மக்களுடைய பிரச்சினை களை விவாதிக்க இதற்காக எமது திருகோணமலை,அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தலைமையில் மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக் குழுவினருடன் கண்காணிப்புக்குழு அல்லது அனுசரணையாளர்கள் பேச வேண்டும். எமது மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள மனிதாபிமானப்பிரச்சினைகளாக இடப்பெயர்வு, பொருளாதாரத்தடை, போக்குவரத்துத்தடை ஆகியவை [illegible] எமது மக்களுடைய நீர்விநியோகங்களும் தீர்செய்யப்படவேண்டும்.

இதற்கான ஒரு காலஅவகாசத்தை நோர்வே தூதுக்குழுவினர் கேட்டனர். மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குள் இப்பிரச்சினைகள் தீர்க்கப்படுமென்றும் நோர்வேத்தூதுக்குழு உறுதியளித்துள்ளது.

ஆகையால் எங்களுடைய தலைவர் ஒரு நல்லெண்ண அடிப்படையாக உடனடியாக நீரைத்திறந்துவிட இணக்கம் தெரிவித்துள்ளார்.

*இராணுவத் தாக்குதல்கள்*

அரசு கூறிவருகின்ற நீர்ப்பிரச்சினையை பேசித்தீர்ப்பதற்கு தயாராக இருந்த நிலையில் யுத்தநடவடிக்கையை இராணுவத்தினர் மேற்கொண்டனர்.

நீர்ப்பிரச்சினை என்ற பெயரில் எங்களுடைய பகுதிகளை ஆக்கிரமிப்பதற்காக விமானக்குண்டு வீச்சுக்கள், செல் வீச்சுக்கள், படை நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆகையால் நாம் சில தற்காப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டோம். மூதூர்ப்பகுதிகளில் இருந்து ஆட்லறி எறிகணை வீச்சுக்கள் மற்றும் எமது பகுதிகளுக்கான ஊடுருவல்கள் நிகழ்ந்து கொண்டு இருந்த காரணத்தால் நாம் மூதூர்ப் பகுதி முஸ்லிம் மக்களிடம் தயவுசெய்து பாதுகாப்பான பகுதிகளுக்கு செல்லும்படி வேண்டுகோள் விடுத்து எங்கள் மீது தாக்குதல் நடத்திக்கொண்டிருந்த படைகளின் முகாம்களை தாக்கி அழிக்கின்ற ஒரு மட்டுப்படுத்தப்பட்ட படை நடவடிக்கையைச் செய்து எங்கள் செயற்பாட்டைக் காட்டியிருக்கின்றோம்.

அதனைவிடுத்து அரசபடையானது விமானக்குண்டு வீச்சுக்கள், ஆட்லறி எறிகணைவீச்சுக்கள் மற்றும் படையெடுப்புக்களைத்தொடர்ந்து வலிந்து முன்னெடுப்பார்களேயானால் அதனை ஒரு மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையாக கருதமாட்டோம்.

ஒட்டுமொத்தமாக ஒரு யுத்தநடவடிக்கையாகக்கருதி ஒரு பரந்தளவிலான நடவடிக்கைகளை நாங்களும் எடுக்க நிர்ப்பந்திக்கப் படுவோம் என்பதை இன்றைய சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளோம்.

*கண்காணிப்புக்குழுவின் வெளியேற்றம்*

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் இருந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் வெளியேறவேண்டுமென்று நாங்கள் கூறியதாக தெரிவிக்கப் படுவது ஒரு தவறான சொற் பிரயோகம்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் வெளியேறவேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் முன்வைத்ததில்லை. வெளியேறும் நிர்ப்பந்தத்தை அரசாங்கம் தான் உருவாக்கியது.

ஏனெனில் சமாதான முயற்சிகளிலும் அமைதிச்செயற்பாடுகளிலும் கண்காணிப்புக்குழுவின் செயற்பாடுகளிலும் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த மூன்று நாடுகளின் பிரதிநிதிகள் காத்திரமான பங்கைவகிக்கிறார்கள் என்பதே அரசுக்குத் தெரியும்.

எம் மீது தடை அறிவிப்பைச்செய்யும் படி தூண்டி அதற்கான அழுத்தங்களைப்பிரயோகித்து இந்த நிலைமைகளை மோசமாக்கியது அரசாங்கம் தான். அது புலிகள் எடுத்த நிலைப்பாடு அல்ல என்றார்.

இதனை போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினரும் விளங்கிக்கொண்டுள்ளனர். இது விடயம் தொடர்பாக சுவீடன் நாட்டு சிறப்புத்தூதுவரிடம் கலந்துரையாடியிருக்கின்றோம்.பலரிடமும் பேசியிருக்கின்றோம்.

*மூதூர் தற்காப்புத் தாக்குதல் ஏன்?*

நீர் விவகாரத்தை அடுத்தநாளே பேசித் தீர்க்கக்கூடிய வகையில் கண்காணிப்புக்குழு விரைந்து செயற்பட்டுக்கொண்டிருந்தது என்பதே உண்மை. கண்காணிப்புக்குழுவினர் எங்களுடைய மக்கள் பிரதிநிதிகள், பொறுப்பாளர்களுடன் கலந்துரையாடி அடுத்தநாளே நீர் திறந்து விடப்பட்டிருக்கும்.

நீர் விவகாரத்தை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு படை நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்பதுதான் அரசின் நோக்கமாக இருந்தது.

அதனால் ஏற்பட்ட பின்னடைவுகளால் அரசு மாற்று நிலைப்பாட்டை எடுப்பதற்குத் தள்ளியது என்பதுதான் எங்களுடைய கருத்து.

இந் நிலையில் மனிதாபிமான நிலையைக்காட்டி யுத்தத்தை எப்படித் திணித்தார்களோ அதேபோன்று நாமும் ஒரு தற்காப்பு யுத்தத்தை எதிர்கொள்ளவேண்டி வந்ததால் மிகப்பெரிய மனிதாபிமான நெருக்கடி தமிழ் மக்கள் மத்தியிலும் முஸ்லிம் மக்கள் மத்தியிலும் ஏற்படுத்தப்பட்டது.

தற்போதைய படை நடவடிக்கையால் ஏற்பட்ட பின்னடைவுகள் காரணமாக அரசாங்கம் படை நடவடிக்கைகளில் நம்பிக்கை இழந்துதான் அனுசரணையாளர்களை இங்கு அனுப்பியிருக்கின்றனர்.

எமது தலைமைப்பீடம் ஏற்கனவே எடுத்த நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி எமது இணக்கப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளோம்.

மூதூர் பிரதேசத்தை இராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ளது. இப் பிரதேசத்தில் செறிவாக முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர். இப் பிரதேசங்களில் நிலைகொண்டபடி மக்கள் வாழ்விடங்கள் மீது தொடர் எறிகணை வீச்சுத்தாக்குதல்களையும் நீர் விநியோகப் பகுதிகளுக்கு படையினரை நகர்த்துவதற்காக செயற்பாடுகளையும் இராணுவம் மேற்கொண்டது.

எமக்கு எவ்வித மாற்றுவழியில்லாத நிலையில் தான் மூதூர் மீதான ஒரு நடவடிக்கையை எடுத்தோம் என்றார்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு பாரிய மனித அவலத்தை ஏற்படுத்திய முழுப் பொறுப்புமே அரசையும் அரச படைகளையும் சாரும் என தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

*முஸ்லிம் இளைஞர்கள் காணாமல் போயுள்ளனரா?*

மூதூர் தாக்குதலின்பின்னர் பெருமளவான முஸ்லிம் இளைஞர்களை காணவில்லை என்று அரசு கூறுவது முற்றுமுழுதான பொய்க்குற்றச்சாட்டு.

ஒரு படை நடவடிக்கை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது முஸ்லிம் மக்கள் பாதுகாப்பாக சில பாதையூடாக வெளியேறுவதற்கு வசதிகளை நாம் செய்துகொடுத்து வெளியேறிக்கொண்டிருந்தார்கள்.

அப்போது கருணாகுழுவைச்சேர்ந்தவர்கள் மற்றும் இராணுவத்தினுடைய ஊடுருவல் அணியின்ரை எமதுபோராளிகள் கைது செய்து விசாரித்துக்கொண்டிருந்தனர். அது அங்கே பகிரங்கமாகத்தெரிந்த உண்மை.

இதை வைத்துக்கொண்டுதான் முஸ்லிம் இளைஞர்களை கடத்தியதாக அரசாங்கம் பொய்ப்பரப்புரை மேற்கொண்டு வருகிறது. இதை முற்றுமுழுதாக மறுகிறோம்.

முஸ்லிம் இளைஞர்களை கடத்தவேண்டிய தேவையோ கொல்லவேண்டிய தேவையோ எமக்கில்லை. எமது நடவடிக்கை என்பது ஆக்கிரமிப்புப்படைகளுக்கு எதிரானதே. ஆக்கிரமிப்புப்படைகளை இலக்கு வைத்து தாக்குதல்கள் நடத்தப்பட்டன. எமது படை நடவடிக்கையானது முஸ்லிம் மக்களையோ சிங்கள மக்களையோ இலக்கு வைத்து அல்ல என்பதை ஆணித்தரமாகக்கூறுகிறோம் என்றார்.

திருகோணமலை போன்ற இடங்களில் கண்காணிப்புக்குழுவினர் செயற்பட முடியாமல் அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளமை குறித்து நோர்வேக்குழுவிடம் சுட்டிக்காட்டினோம்.

யுத்தநிறுத்தம் நடைமுறையில் உள்ளதா என்ற கேள்வி எழுப்பினோம். கண்காணிப்புக்குழுவினால் யுத்த நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த முடியுமா என்றும் கேட்டுள்ளோம். இது பற்றி அரச தரப்பினருடன் பேச உள்ளதாக நோர்வேக்குழுவினர் கேட்டனர்.

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமான உறவு எப்போதோ முறிந்துவிட்டது. அனுசரணையாளர்கள் தான் இடையிடையே முயற்சித்துப்பார்க்கின்றனர் என்றார் சு.ப.தமிழ்ச்செல்வன். (ச-5)

## மூதூரில் ...

படுகொலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இராணுவத்தின் எறிகணைத் தாக்குதல் நேற்று மாலை 4 மணி முதல் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)


## உடன் [illegible] வை

பத்திரிகை [illegible] கஸ்தர்கள்

சொந்தமாக மோட்டார் [illegible] க்கில் வைத்திருப்பவர்கள் நேரில் வரவும்.

[illegible] உத்தியோகத்தர்,
வலம்புரி.



## பதவி வெற்றிடம்

பொது முகாமையாளர்

35–55க்கு வயதிற்குட்பட்டவர்கள் (மும்மொழித் தொடர்பாடல் உள்ளவர்களுக்கும் முகாமைத்துவ அனுபவம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்)

விண்ணப்பங்களை 12.08.2006க்கு முன்னதாக நிர்வாக உத்தியோகத்தர், வலம்புரி, இல. 3, 2 ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

நிர்வாக உத்தியோகத்தர்,
வலம்புரி.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 07.08.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.